விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 302 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை (17.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து

# விடுபடும் போக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

HUMAN RIGHTS WATCH

(நியூயோர்க்)

இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில்

### தீயில் எரிந்த வர்த்தக நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று வடக்குப் பகுதியில் பல்பொருள் விற்

15ஆம் பக்கம் பார்க்க

## ஆமை இறைச்சியுடன்

### பாசையூரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பாசையூர் பகுதியில் 35 கிலோ 400 கிராம் எடையுடைய ஆமை

15ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினருக்கு ரேடார் அமைக்க கீரிமலையில் காணி வழங்க முடியாது

### வலி.வடக்கு பிரதேச சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கீரிமலையில் கடற்படையினர் ரேடார் அமைக்கக் கோரும் 2 ஏக்கர் காணியை வழங்க முடியாது என வலிகாமம் வடக்கு பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நேற்று பிரதேச சபை சபா மண்டபத்தில் நடைபெற்றபோது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது போதைப் பொருள் ஒழிப்புக்காக ரேடார் அமைக்கவே காணி கோரப்படுவதாகத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர், காணி உரிமையாளர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். அதில் அரசியல் செய்ய வேண்டாம் எனத் தெரிவித்தார்.

இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த தவிசாளரும்

16ஆம் பக்கம் பார்க்க

## அநுராதபுரத்தில் விபத்து ஏழாலை பெண் மரணம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லும்போது ஏற்பட்ட வாகன விபத்தில் இளம் குடும்பப்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் தகரம் வெட்டியதில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இரும்பகம் ஒன்றில் தகர அட்டியை நகர்த்த முற்பட்ட வேலை

15ஆம் பக்கம் பார்க்க

### 3 இலட்சம் சாரதி அனுமதி பத்திரங்களை விநியோகிக்கத் திட்டம்

(கொழும்பு)

தற்போது 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவற்றை அடுத்த மூன்று மாதங்களில் அச்சிட்டு விநியோகிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சின்

16ஆம் பக்கம் பார்க்க

## இஷாரா செவ்வந்தியின் நெகிழ்ச்சியான செயல்

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவவின் கொலை வழக்குடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளில் ஒருவரான இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட அறுவரிடம் தற்போது பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதன்போது இஷாரா செவ்வந்தியிடமிருந்து கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பான பல முக்கிய தகவல்கள் வெளிவந்துள்ளன.

இஷாரா செவ்வந்தியிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது

02ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் ரயிலிலிருந்து தவறிவீழ்ந்த பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் புகையிரதத்தால் இறங்க முற்பட்ட பெண் ஒருவர் புகையிரதத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

## அல்லைப்பிட்டியில் பேருந்து மோதியதில் மீன் வியாபாரி பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா

15ஆம் பக்கம் பார்க்க

### சரத் பொன்சேகா சாட்சியம் வழங்கினால்

## யுத்தம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் நடந்த விடயங்கள் தொடர்பில் உண்மையாகவே சாட்சியம் வழங்குவார் என்றால் சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

04ஆம் பக்கம் பார்க்க

## முள்ளியவளையில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் விபரீத முடிவெடுத்த யுவதி உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் விபரீத முடிவெடுத்த யுவதி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

# நீள நினைந்துருகல்



## அமரர் இளையதம்பி இரட்ணம்

(யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை சந்தைப்படுத்தல் துறைத் தலைவர்)

எமது சந்தைப்படுத்தல் முகாமைத்துவ விரிவுரையாளரும் சென்ஜோன்ஸ் கல்லூரியின் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வணிக மாணவர்களுக்கு உயர்தரப் பரீட்சை தொடர்பான விளக்கங்களை, கையேடுகள் மூலமும் விரிவுரைகள் மூலமும் தொடர்ச்சியாக நீண்டகாலமாக இலவசமாக ஆற்றிய பெருந்தகையாளரும் ஆவார்.

அமரரின் தன்னிகரில்லா கல்விப் பணியினால் சென்ஜோன்ஸ்
கல்லூரி வணிக மாணவர்கள் பெரும் பயன் பெற்றார்கள்.
காலத்தினால் கருமம் ஆற்றிய பெருந்தகை
எம் நினைவழியும் காலம் வரை
எம் நினைவில் என்றும் இருப்பார்
ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

(5675)

**தர்மலிங்கம் நந்தகுமாரன்**

ஓய்வுபெற்ற, சென்ஜோன்ஸ் கல்லூரி கலை, வணிகத் துறை மேற்பார்வையாளரும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவப்பீட பட்டதாரியும் (1983/1987)

## இஷாரா...

கணேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்படுவதற்கு முன்னர் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றவற்றைக் கூறியுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவவை கொலை செய்வதற்காக நீதிமன்றத்துக்கு வந்திருந்தபோது, நான் ஒரு சட்டத்தரணி என்று நினைத்து ஒரு பெண் தனது வழக்குக்காக முன்னிலையாகுமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். நான் சட்டத்தரணிகளுக்கான ஓய்வறையில் இருந்தேன், அப்போது ஒரு பெண் என்னிடம் வந்து கதைத்தார். அவர் என்னை ஒரு சட்டத்தரணி என்று நினைத்திருக்கிறார்.

அப்பெண்ணின் கணவர் அவரை கடுமையாகத் தாக்கியுள்ளார், அது தொடர்பான வழக்கு புதுக்கடை நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அவர் என்னிடம் கூறினார் "மேடம், கஷ்டப்பட்டு சேர்த்த ஆயிரம் ரூபாய் தான் இருக்கிறது. இதை எடுத்துக் கொண்டு என் வழக்குக்காக வாதிடுவீர்களா?" என்று கேட்டார். அந்த நேரத்தில் எனக்கு அப் பெண்ணைப் பற்றி மிகவும் கவலையாக இருந்தது. நான் அவரிடம், "நான் வேறு ஒரு வழக்குக்காக வந்திருக்கிறேன். அதனால், உங்கள் வழக்கை அங்கே இருக்கும் மேடத்திடம் கொடுங்கள் என்று கூறினேன்.

அவ்வாறு கூறி, என் கண்ணுக்குத் தெரிந்த வேறொரு பெண் சட்டத்தரணியிடம் அவரை அனுப்பினேன். அப் பெண் அந்த சட்டத்தரணியிடம் சென்று தனது கதையைக் கூறினார். அந்த சட்டத்தரணி வழக்குக்கு முன்னிலையாவதற்கு 2000 ரூபாய் கேடடுள்ளார். அப் பெண்ணிடம் பணம் இல்லாததால் என்னைப் பார்த்தார். நான் அவரை அறைக்கு வெளியே அழைத்து, என்னிடம் இருந்த 5000 ரூபாயைக் கொடுத்து, உதவினேன். அவர் என் இரு கைகளையும் பிடித்து வணங்கி பணத்தை வாங்கிக் கொண்டார். என செவ்வந்தி தெரிவித்துள்ளார். (ம-7)



யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய உதவித் தொழில் ஆணையாளராக திருமதி இராஜமல்லிகை சிவசுந்தர சர்மா கடமைகளைப் பொறுப்பேற்றார்.


**கல்யாணி நகை மாளிகை**

வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதி பணம் வழங்கப்படும்.

(C-4105)

077 784 0379

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**SMART TECH SOLUTION**

SINCE 2009

உங்கள் பாதுகாப்பில் நாங்கள் அக்கறை கொள்கிறோம்

அங்கீகரிக்கப்பட்ட
விற்பனை முகவர்

- 16 வருட அனுபவம் வாய்ந்த சேவை
- பொருத்துனர் மற்றும் விற்பனையாளர்களுக்கு 30% விலைக்கழிவு
- 1000இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள்
- வாடிக்கையாளர் அழைப்புகளுக்கு 100% பதிலளிக்கப்படும் (விற்பனைக்கு பிந்திய சேவை)
- நட்பு ரீதியான வாடிக்கையாளர் சேவை
- எமது வாடிக்கையாளர்களிடமிருந்து எமது சேவைத் தரத்தை அறிந்துகொள்ளலாம்.




HIKVISION | HIKSEMI | EZVIZ Creating Easy Smart Homes

இல.282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Smarttechsolution.lk

071 684 3023 ☎ 021 221 3023

(C-4121)

# தவறிழைத்தவர்கள் தப்ப முடியாது!

## அமைச்சர் சந்திரசேகர்



**(கொழும்பு)**

**உலகில் எந்த மூலையில் பதுங்கி இருந்தாலும் தவறிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவு கட்டப்பட்டுவருகின்றது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

கொழும்பில் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்படும் என நாம் உறுதியளித்திருந்தோம்.

இதற்காகப் பொலிஸார் உட்பட பாதுகாப்புத் துறையினருக்கு தேவையான வளங்களை வழங்கினோம். அவர்கள் சிறப்பாகத் தமது கடமைகளை செயற்படுத்தி வருகின்றனர்.

போதைப் பொருள் கடத்தல் மன்னர்கள் சிக்கி, சிறைக்கு சென்றுள்ளனர். நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற நபர்கள்கூட நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் இப்படியான கைதுகள் நடத்தப்படவில்லை.

நாட்டில் கடந்த காலங்களில் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றபோது, இவற்றை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும், செவ்வந்தி உள்ளிட்டவர்களை பிடிப்பதற்குக் கூட தெம்பு இல்லை எனவும் எதிரணிகள் கூச்சலிட்டன. ஆனால் எந்த கொம்பனாக இருந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்பது இன்று நிரூபனமாகி வருகின்றது.

கடந்தகாலங்களில்தான் குற்றவாளிகள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர். ஆனால் எமது ஆட்சியில் குற்றவாளிகளுக்கு இடமில்லை.

மக்களுடைய சொத்துக்களை களவாடியவர்கள், சூறையடித்தவர்கள் சட்டத்தின் பிடிக்குள் சிக்குவார்கள். மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன் மகேந்திரன் விடயத்திலும் சட்டம் செயற்படும்" என அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார். (நி)

## அதிக விலைக்கு குடிநீர் போத்தல் விற்பனை; 25 மில்லியன் ரூபாவுக்கு மேல் அபராதம்

(கொழும்பு)

அதிக விலைக்கு குடிநீர் போத்தல்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளில் 25 மில்லியன் ரூபாவுக்கு மேல் அதிகமான அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 1 முதல் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையிலான ஆறு மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் இருந்து இந்த அபராதங்கள் வசூலிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்தக் காலகட்டத்தில், நாடு முழுவதும் 306 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் பெரும்பாலானவை கொழும்பு மாவட்டத்தை மையமாகக் கொண்டிருந்தன.

இந்தச் சோதனைகள் எதிர்காலத்தில் தொடரும் என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் பிரதமர் ஹரிணி சந்திப்பு



(டில்லி)

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கரை நேற்றுக் காலை புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இது அவரது முதல் இந்திய அதிகாரபூர்வ பயணத்தின் ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இந்த சந்திப்பு குறித்த எக்ஸ் பதிவில் இந்திய வெளிவிகார அமைச்சர்,

இலங்கைப் பிரதமரை சந்தித்தது மகிழ்ச்சி அளித்ததாகவும், இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான கல்வி மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்டவைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகவும் கூறினார். (நி)

## சீரற்ற வானிலையால் 112 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, களுத்துறை, காலி, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 112 குடும்பங்களைச் சேர்ந்த 369 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. (நி)

## சருமத்தை வெண்மையாக்கும் கிறீம், ஊசிப் பாவனை அதிகரிப்பு!

(கொழும்பு)

வைத்தியசாலையின் சருமநோய்ப் பிரிவுக்கு வருகை தரும் 100 நோயாளர்களில் ஐவர் சருமத்தை வெண்மையாக்கும் களிம்பு பாவனையால் ஏற்பட்ட பக்கவிளைவுகளால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சருமநோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் இந்திரா கஹாவிட்ட இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சட்டங்கள் கடுமையாக்கப்படாததால் பலர் இவ்வாறான தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறெனினும் சருமத்தை வெண்மையாக்கும் அழகுசாதனப் பொருட்கள் தொடர்பில் பாவனையாளர்கள் முறைப்பாடளிக்க முடியும்.

முறையான அனுமதி மற்றும் தர நிர்ணயம் இன்றி ஒருவரின் உடல் ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் பொருட்களை விற்பனை செய்வதும் குற்றச்செயலாகவே கருதப்படுகிறது. சமூகத்தில் அதிகரித்துள்ள சருமத்தை வெண்மையாக்கும் களிம்பு பாவனை தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

வைத்தியர் தொடர்ந்து தெரிவிக்கையில், சமீபகாலமாக பெண்களிடையே சருமத்தை வெண்மையாக்கும் களிம்பு மற்றும் ஊசிகளின் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் மாத்திரமல்ல எந்தவொரு நாட்டிலும் இந்த ஊசிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இவை சிக்கலான சருமநோய்கள் மற்றும் பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

இளம் பருவத்தினர் முதற்கொண்டு வயது வந்த பெண்கள் வரை சரும களிம்புகளை உபயோகிப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஆண்களும் தற்போது அந்த வரிசையில் இணைந்துள்ளனர். அரச வைத்தியசாலையின் சருமநோய்ப் பிரிவுக்கு வருகை தரும் 100 நோயாளர்களில் 5 பேர் தோலை வெண்மையாக்கும் களிம்பு பாவனையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனத் தெரிவித்தார். (நி)



## இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் அவுஸ்திரேலிய அணியில் திடீர் மாற்றம்



இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 இருப துக்கு 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்திய அணியுடன் மோதும் அவுஸ்திரேலியா அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகளுக்குத் தலைவராக மிட்செல் மார்ஷ் செயற்பட உள்ளார்.

இந்த நிலையில், முதல் ஒரு நாள் போட்டிக்காக அறிவிக்கப்பட்ட அவுஸ் திரேலிய அணியில் அடம் ஜாம்பா மற்றும் ஜோஷ் இங்லீஷ் ஆகிய இருவரும் விலகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களுக்குப் பதிலாக ஜோஷ் பிலிப்ஸ் மற்றும் மேத்யூ குனேமான் ஆகியோர் மாற்று வீரர்களாக இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில், அவுஸ்தி ரேலிய மற் றும் பங்களாதேஷ் மகளிர் அணிகள் மோதவுள்ளன.

அத்துடன், இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகளுக் கிடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டி, மழை காரணமாகக் கைவிடப்பட்டது. (நி)

## மன்னார் தாழ்வுபாடு புனித ஜோசப் ம.வி; தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் திறப்பு



(மன்னார்)

கொமர்ஷல் வங்கி மன்னார் கிளையின் நிதி உதவியுடன் மன்னார் தாழ்வுபாடு புனித ஜோசப் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நான்கு மில்லியன் ரூபாய் நிதி உதவியுடன் ஒரு தொகுதி கணனிகள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்ட நிலையில், அமைக்கப்பட்ட குறித்த தகவல் தொழில்நுட்ப ஆய்வகம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ஜெயபாலன் கலந்து கொண் டார். சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், கொமர்ஷல் வங்கியின் மன்னார் கிளை முகாமையாளர் கங்காதரன், ஆகியோர் குறித்த தகவல் தொழில்நுட்ப ஆய்வகத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத் தனர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் மர நடுகையும் இடம் பெற்றது. இதன் போது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)



வல்வெட்டித்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் பரிசளிப்புநிகழ்வு கடந்த 13 ஆம் திகதி நிலையத்தின் தலைவர் வேலுப்பிள்ளை கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பருத்தித்துறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் துசிதாததம்பிக்கா ஜெயா ரத்தின கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

(படம்: மகாலிங்கம்)

## உழவு இயந்திரம் - டிப்பர் நேருக்கு நேர் மோதி விபத்து



(தருமபுரம்)

கிளிநொச்சி பரந்தன் பகுதியிலிருந்து முரசுமோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவியந்திரமும் எதிர்த் திசையில் வந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

பரந்தன் பகுதியில் இருந்து முரசுமோட்டை நோக்கி அரிகல் ஏற்றிய நிலையில் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரமும் எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றது.

உழவியந்திரத்துடன் மோதிய டிப்பர் வீதியில் குறுக்காக தடம் புரண்டுள்ளது. உழவியந்திரத்தில் பயணித்த பெண் உட்பட மூன்று பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். டிப்பர் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

விபத்துத் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

## யுத்தம் ...

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இறுதி யுத்தத்தில் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் சாட்சியம் வழங்கத் தயார் எனக் கூறி வருகின்றமை தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணை நடைபெற்றால் இனப்படுகொலை நிரூபிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றபோது அதனைக் குழப்பும் விதமாக அரசுடன் இணைந்து செயற்படும் விதமாக சரத் பொன்சேகாவின் கருத்துக்களும் இருந்து வருகின்றன.

இறுதி யுத்தத்தின் போது இராணுவம் தொடர்சியாக மக்களை அழிக்கின்ற நடவடிக்கைகளின் போது கடும் ஆட்லறித் தாக்குதல்களை மக்கள் மீது பயன்படுத்தி வந்த சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்குக் கண்காணிக்கப்பட்ட ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு என்னுடன் தொடர்புகளை மேற்கொண்டார்கள்.

அவ்வகையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொண்டேன். குறிப்பாக 2009 ஆண்டு மே மாதம் இருபக்கத் தொடர்புகளை மேற்கொண்டு இணக்கப்பாடு எற்படுத்தப்பட்டது.

குறிப்பாக இரண்டு ஆயர்களான இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் அரசு நேரடியாகத் தொடர்பு கொண்டு அரச தரப்பில் பசில் ராஜபக்ஷவும், நானும் வன்னி கட்டுப்பாட்டுக்குக் சென்று அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன் வெளியில் வந்து மக்களைப் பாதுகாப்பாக வெளியில் கொண்டு வருவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால் பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்தபோதும் இராணுவம் ஆட்லறித் தாக்குதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்ட நிலையில் எதற்காக இதனைச் செய்கிறீர்கள் என்றபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லை. அவர் நாடு திரும்பிய பின்னர் தேசிய பாதுகாப்புக் கூட்டத்தில் கலந்துரையாடியே முடிவு எடுக்கப்படும் எனக் கூறப்பட்டது.

எனினும் அந்தக் கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்படாது தொடர்ச்சியாக மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது. ஏன் தொடர்ந்தும் இதனைச் செய்கிறீர்கள் எனக் கேட்டபோது தேசிய பாதுகாப்புக் கூட்டம் கூடும் வரை தாக்குதலை நிறுத்த முடியாது எனக் கூறப்பட்டது.

அத்துடன் வெள்ளைக்கொடியுடன்தான் வர முடியும் எனக் கூறப்பட்டது. இது சாத்தியப்பாடு இல்லாத விடயம் என்பதால் எனது இணக்கப்பாட்டை நான் முடிவுறுத்திக் கொண்டேன்.

காரணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அமைப்பின் மூலம் மக்களை பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சரிவராத நிலையில் தான் என்னுடனான தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளைக்கொடி விவகாரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காரணம் பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கம் காணப்பட்ட போதும் தொடர்ச்சியான ஆட்லறித் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது மக்களை இல்லாது ஒழிப்பதற்கான சூழலைத்தான் அரசு செய்தது என்பதே நான் கூறும் விடயம். இது இனப்படுகொலையின் விவகாரமாகும்.

ஆனால் சரத் பொன்சேகா தற்போது கூறிவரும் வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பில் நான் கூற முடியாது. வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களை கொலை செய்தார்கள் என்பது கடந்த காலங்களில் வெளிவந்த உண்மைகள் என்பது அனைவருக்கும் புரிந்த விடயம் ஆகும்.

சரத் பொன்சேகா தற்போது கூறும் விடயம் வெள்ளைக்கொடி தொடர்பாகத் தான் சாட்சி வழங்கத் தயார் என்பதே. உள்ளக விசாரணைக்குள் வெள்ளைக் கொடி விவகாரம் முடக்கப்படுவதற்கான அத்திவாரம் போடுகின்ற கருத்தாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

சரத் பொன்சேகாவும் சர்வதேச குற்றவியல் விசாரணை தான் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும் என்றார். (ம-7.33)

# INVITATION FOR BIDS 2025/07

## Valikamam South Pradeshiya Sabha, Chunnakam

## Council Fund - Stage 7

1. The **Chairman, Divisional Procurement Committee (DPC)**, on behalf of the, **Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the contract amount exceeds Rs.5.0 million".**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the **Schedule**(Section 5) for **SBD 3** Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs. **(T.P:021-224-0017 )**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees Rs 3,500.00 only.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam on or before 10.30 am as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam**
8. Pre-Bid Conference will be held at Cultural Hall, **Valikamam South Pradeshiya Sabha, KKS Road, Maruthanarmadam, Chunnakam, commencing at 10.00 AM as stated in table above.**

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025.10.17 - 2025.10.30 |
| Pre – Bid Conference | At 10.00 A.M On 2025.10.24 |
| Closing and Opening of Bid | At 10.30A.M on 2025.10.31 |

| S.No | Bid ID | Description of Work | Estimate Cost – Civil cost (Rs.Mn) | Contract Period | CIDA /ICTAD Grade & Specialty | Bid validity Period | Required Bid Security / Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Amount | Validity Period |
| **Council Fund** | | | | | | | | |
| 01 | NP/14/41(15)/02/05/CF- D / 2025/44 | **Package 01**<br>1. Construction of Erlalai Navalady road (Ilankaiyarkon veethy) (J/201 & J/206)<br>2. Construction of by lane of Poothavarayar kovil road (J/207)<br>3. Renovation of Sub lane of Punnalaikkadduvan Puliyankinaththady (J/203) | 2.65 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 27,000.00 | 15/01/2026 |
| 02 | NP/14/41(15)/02/05/CF - D / 2025/45 | **Package 02**<br>1. Construction of Meenadchi amman Kovilady Thodda paathai (J/209)<br>2. Construction of the road between Puththoor road 3rd junction & Eevinai (J/209) | 2.34 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 24,000.00 | 15/01/2026 |
| 03 | NP/14/41(15) /02/05/CF- D / 2025/46 | Construction of Poovilady veethy (J/209) | 5.62 | 75 Days | C8 or above (High way) | 15/01/2026 | 57,000.00 | 12/02/2026 |
| 04 | NP/14/41(15)/02/05/CF -D/ 2025/47 | **Package 03**<br>1. Construction of by lane of G G Ponnampalam veethy (J/208)<br>2. Construction of Erumpukkadavai Amman Kovilady road (J/211)<br>3. Construction of Near road of Kuppilan Keniyady Vairavar kovil (J/211)<br>4. Construction of 7th cross lane of Thidatpulam (J/208) | 3.27 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 33,000.00 | 15/01/2026 |
| 05 | NP/14/41(15)/02/05/CF -D/ 2025/48 | **Package 04**<br>1. Construction of Cross road of Nilavarai Punnalaikkadduvan road (near of Mascon Junction) (J/209)<br>**2.** Renovation of Link road of Mandan veethy & Kalaiyarasi veethy (J/209)<br>**3.** Construction of Mangala amman veethy (J/209) | 2.36 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 24,000.00 | 15/01/2026 |
| 06 | NP/14/41(15)/ 02/05/CF-D / 2025/49 | Reconstruction of Koththiyawaththai Ampanai road (J/199) | 4.59 | 60 Days | C8 or above (High way) | 18/12/2025 | 46,000.00 | 15/01/2026 |
| 07 | NP/14/41(15)/02 /05/CF -D/ 2025/50 | **Package 05**<br>**1.** Renovation of Front lane of Police station at Kumarasamy pulavar road (J/196)<br>**2.** Renovation of Iyanar kovil Vayal road (J/199) | 5.30 | 75 Days | C8 or above (High way) | 15/01/2026 | 53,000.00 | 12/02/2026 |
| 08 | NP/14/41(15) /02/05/CF - D/ 2025/51 | Renovation of Pillaiyar kovil veethy (J/200) | 9.90 | 84 Days | C8 or above (High way) | 15/01/2026 | 100.000.00 | 12/02/2026 |
| 09 | NP/14/41(15)/02/05/CF- D / 2025/52 | **Package 06**<br>1. Construction of 2nd by lane of Vilathiyady (J/208)<br>2. Construction of 6th lane of Anthiran road (J/187)<br>3. Renovation of Sankampulavu lane (Sayampu lane) (J/187) | 2.63 | 60 Days | C9 or above (High way) | 18/12/2025 | 27,000.00 | 15/01/2026 |
| 10 | NP/14/41(15)/0 2/05/CF-D/ 2025/53 | Construction of Access road and burning shed of Usathiyodai Hindu Cemetery (J/205) | 1.75 | 60 Days | C9 or above (High way & Buildings) | 18/12/2025 | 18,000.00 | 15/01/2026 |
| 11 | NP/14/41(15)/02/05/ CF-D/ 2025/54 | Construction of Wholesale Outlet at Maruthanarmadam Market | 4.87 | 60 Days | C8 or above (Buildings) | 18/12/2025 | 49,000.00 | 15/01/2026 |
| 12 | NP/14/41(15)/02/05/CF/ 2025/55 | **Package 07**<br>**1.** Construction of Concrete Precast name board<br>**2.** The Improvements of head office ground floor feeding mother room, Vice Chairman room & Record room<br>**3.** Construction of Deco grill work at Sankuveli Community center & Construction of Sankuveli playground tank work<br>**4.** Renovation of Kothiyalady Semakkalai | 4.14 | 75 Days | C8 or above (Buildings) | 15/01/2026 | 42,000.00 | 12/02/2026 |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam South Pradeshiya sabha,**
**Chunnakam.**

**17.10.2025**

(C-4120)

# 'ஆரோக்கியமான முதுமை' வழிகாட்டல் முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர் தினம் மற்றும் முதியோருக்கான ஆரோக்கிய வாழ்வுக்கான வழிகாட்டல் முகாம் "ஆரோக்கியமான முதுமை" எனும் தொனிப்பொருளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி தனுஜா லுக்ஷாந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண வர்த்தகவாணிப அமைச்சின் செயலாளர் முத்துலிங்கம் நந்தகோபாலன், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுப்பிரமணியம் முரளிதரன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். டி.எம்.ஏ.கே. டிசாநாயக்க, கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# ராஜனி திராணகம நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

21.09.1989 ஆண்டு படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உடற்கூற்றியல் துறையின் விரிவுரையாளர் அமரர் கலாநிதி ராஜனி திராண கமவின் 36 ஆவது வருட நினைவுக் கூட்டமும், நினைவுப் பேருரையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் பிரதான வீதியில் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகே இருக்கும் சென் ஜோன்ஸ் த பப்டிஸ்ட் தேவாலயத்தின் பரிஸ் மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விலே "சமகால உலக ஒழுங்கில் நீதிக்கான சாத்தியம்/ சாத்தியமின்மை" என்ற தலைப்பிலே பொருளாதாரத்துக்கான லண்டன் கற்கை நிலையத்தின் பால்நிலை கற்கைகள் துறையின் வருகைநிலை பேராசிரியரான கிரண் கிரேவல் நினைவுப் பேருரை ஆற்றுவார். இவரின் உரைக்கு தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும்.

உரையைத் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடல் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் இடம் பெறும்.

ராஜனி திராணகம ஞாபகார்த்தக் குழுவினரும், சக வாழ்வுக்கான யாழ்ப்பாண மக்களின் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்யும் இந்த நிகழ்விலே, மனித உரிமை ஆர்வலர்கள், பெண்ணியச் செயற்பாட்டாளர்கள், சமூக நீதிச் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள், மாணவர்கள், பெண்கள், பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# விரைவில் திரைக்கு வரவிருக்கும் 'கண்ணம்மா' ஈழத்துத் திரைப்படம்




2J மூவீஸ் தயாரிப்பில் ஜூட் சுகியின் இயக்கத்தில் 'கண்ணம்மா' முழு நீள ஈழத்துத் திரைப்படம் விரைவில் உலகெங்கும் வெளிவரவுள்ளதாக 2J தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈழத்து கலைஞர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இத் திரைப் படத் தில் கதாயாகனாக சபேசனும் கதாநாயகியாக நிந்துஜாவும் நடித்துள்ளனர். அத்துடன் இத் திரைப்படத்தில் பிரதான பாத்திரமேற்று கலை ஞானச் சுடர் இராஜா மகேந்திரசிங்கம் நடித்துள்ளார். ஜூல் கெவின், ஜூவெஸ்வரன், சுவிஸ் ரகு, கப்டன் பாஸ்கரன், ஜாஸ்மின், Dr.பிரேமி, மயூரன், நிமல்ராஜ், சுதாகர், வரோதயன், காட்வின், உஷாந்தன் போன்றோர் பங்காற்றியுள்ளனர். இத்திரைப்படத்திற்கான இசையமைப்பை பிரசாந்த கிருஷ்ணபிள்ளை மேற்கொண்டதுடன் எடிற்றிங் வேலைகளை காரை சிவனேசன் மேற்கொண்டுள்ளார்.

ஒரு குடும்பத்தில் நடக்கும் பாசப் போராட்டத்தைக் கதைக் களமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இத்திரைப்படம் மக்கள் மத்தியில் நல்ல வர வேற்பை பெறும் என தயாரிப்புக் குழு தெரிவித்துள்ளது.(க-8)

# ஏலவிற்பனை

(மல்லாகம்)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப்பொருட்களான மணல், மண், கிரவல், சுண்ணாம்புக்கல், தகர பரல்கள் மற்றும் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் என்பன நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப்புறப்படுத்த வேண்டும். அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள 105 3/4 கியூப் மணல், 3 கியூப் கிரவல் என்பவை நாளை 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

எனவே குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்.

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினையும் கிரவலினையும் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப்பத்திரத்தினைப் பெற்று எதிர்வரும் 22.10.2025 மற்றும் 25.10.2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 300 |
| தக்காளி | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 150 |
| கோவா | 160 | 200 | 200 |
| கரட் | 250 | 250 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 200 |
| பாகற்காய் | 400 | 500 | 500 |
| வெண்டக்காய் | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 300 | 240 |
| பீற்றூட் | 150 | 200 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 250 | 150 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1600 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 1200 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 600 | 400 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 280 |

## பொருளாதார மத்திய நிலையம் நேற்றைய மரக்கறி விலை

| மரக்கறி வகைகள் | மட்டுவில் |
|---|---|
| | ரூபா |
| உ.கிழங்கு (நுவரெலியா) | -- |
| உ.கிழங்கு (ஈரான்) | 210 |
| உ.கிழங்கு (பாகிஸ்தான்) | 180 |
| கரட் | 170 |
| லீக்ஸ் | 170 |
| தக்காளிப்பழம் | 170 |
| போஞ்சி | 320 |
| கோவா | 150 |
| உள்ளி | 400 |
| கெக்கரிக்காய் | 120 |
| கொய்யாப்பழம் | 400 |
| வெண்டிக்காய் | 150 |
| முள்ளங்கி | 300 |
| பூகோவா | 350 |
| கறிமிளகாய் | 350 |
| வற்றாளை | -- |
| பீட்ரூட் | 100 |
| கத்தரிக்காய் | 150-180 |
| கரணைக் கிழங்கு | 200 |
| வாழைக்காய் | 80 |
| பயிற்றங்காய் | 200 |
| பாவல் | 350 |
| மரவள்ளிக் கிழங்கு | 200 |
| பச்சை மிளகாய் | 220 |
| பெ.வெங்காயம் (இலங்கை) | 170 |
| பெ.வெங்காயம் (இந்தியா) | 160 |
| பெ.வெங்காயம் (சிறிது) | 120 |
| சின்ன வெங்காயம் | 120-150 |
| இராசவள்ளி | 800 |
| இஞ்சி | 800 |
| முருங்கை | 120 |
| டுபாய் பூசணி | 120 |
| பூசணிக்காய் | 40 |
| கீரை | 120 |
| புளி | 780 |
| வத்தகைப்பழம் | 80 |
| பப்பாசி | 50 |
| கூட்டுறவு No.1 ஆட்டக்காரி குத்தரிசி 10 Kg | 2550 |
| கூட்டுறவு அரிசி மா 5 Kg | 1275 |

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 44/3, டச்சு வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06, டச்சு வீதியிலுள்ள இல: 44/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் கதிரவேலு சின்னத்துரை என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை கதிரவேலு சின்னத்துரையும் பெண் நவரஞ்சிதமும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2099/22.12.1957ஆம் இலக்க உறுதியால் வயிரமுத்து இராமலிங்கமும் பெண் செல்லமுத்துவும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

சின்னத்துரை மகள் யோகராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2603/16.01.2000ஆம் இலக்க உறுதியால் சின்னத்துரை கைம்பெண் நவரஞ்சிதமலர் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்து முடை யவரானார். குறித்த உறுதியின் உரித்து வாசகப்பகுதியில் மேற்படி பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2099/22.12.1957ஆம் இலக்க உறுதிக்கு மேலதிகமாக, "1978ம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசாமி முகதாவில் 2150ஆம் இலக்கத்தில் நிறைவேறிய மரணசாதனப்படியும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும், குறித்த மரணசாசனம் நிரூபிக்கப்பட்டமை தொடர்பிலான எவ்வித தத்துவ வழக்கு ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

சின்னத்துரை புஸ்பதாசன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12262/09.02.2020ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்துரை நவரஞ்சிதமலர், சின்னத்துரை மகள் யோகராணி ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

திருச்செல்வம் இராமேஸ்வரன், இராமேஸ்வரன் சிவானந்த விஜயலட்சுமி ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு தி.அருச்சுனா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1260/28.05.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்துரை புஸ்பதாசன் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "பெருமாள்காடு"
இறை: வட்டுக்கோட்டை மேற்கு
விஸ்தீரணம்: நில.பர.இலா 02 குளி 14 ½
எல்லைகள்: கிழக்கு-குமாரவேலு முருகையாவுக்கும், சரவணபவானந்தன் குலசூரியருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு-ஒழுங்கை, மேற்கு- வேலுப்பிள்ளை குலசிங்கத்தின் ஆதனம், தெற்கு- தம்பிமுத்து சிவப்பிரகாசத்தின் ஆதனம்

குறித்த திருச்செல்வம் இராமேஸ்வரன், இராமேஸ்வரன் சிவானந்த விஜயலட்சுமி ஆகியவர்கள் ஆதன பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது திருச்செல்வம் இராமேஸ்வரன், இராமேஸ்வரன் சிவானந்த விஜயலட்சுமி ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(5674)

# வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வு




(கண்டாவளை)

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை முன்னெடுக்கப் பட்டது.

கிளிநொச்சி வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கரடி போக்கு சந்தியிலிருந்து பசுமை பூங்கா வரை ஏ-9 வீதி வழியாக குறித்த விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

பார்வையற்றவர்களுக்கு குறிகாட்டியாக இருக்கின்ற இந்த வெண் பிரம்பினுடைய மகத்துவத்தை குறிக்கும் விதத்தில் குறித்த பேரணி முன்னெடுக்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மன்னார் வவுனியா மாவட்டங்களை சேர்ந்த விழிப்புலனற்றோர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315)

# 'தீபாலோக' தீபாவளி இலக்கியக்கூடல்

(யாழ்ப்பாணம்)

"தீபாலோக" தீபாவளி இலக்கியக்கூடல் நிகழ்வு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், சிரேஸ்ட எழுத்தாளர்கள், கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், கலாசார திணைக்களப் பணிப்பாளர், பிரதேச அரசியல் வாதிகள் மற்றும் லேக் ஹவுஸ் நிறுவனம் உட்பட இன்னும் சில நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்களிப்பில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (8)

குரு ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியான சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறை-சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம் பெற்றிருந்தது.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் தவராசா சுபேசனுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான சிறந்த கட்டுரை எழுத்தாளர் விருது வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




உ
சிவமயம்
திண்ணபுரம் சிவன்துணை
ஈழத்துச் சிதம்பரம் கூத்தான் துணை

# இன்று திருவாசகம் ஓதுவோம்

இன்று புரட்டாதி மாதம் 2025 ஆம் ஆண்டு வெள்ளி திருவாசகம் ஓதி. நாட்டில் போதைவஸ்துஅடிமை நீங்கவும், ஆலய புனருத்தானம் நிறைவாகி கும்பாபிஷேகம் நடைபெறவும், மனக்கவலை நீங்கவும், பிறவா முத்தி நிலையும் பிதிர் தோஷம் நீங்கவும், பிரேதசாபம் நீங்கவும் அன்பால் அர்ச்சனையாக பாடிப்பணிவோம்.

தீந்தமிழ்த் திருவாசகம் பாடியருளிய திருவாதர், தனிச்சிறப்பு மிக்க நிறைமொழிமாந்தர் ஆவர்.

நடராஜர் துதி

**சீராரும் சதுமறையும் தில்லை வாழ் அந்தணரும்**
**பாராரும் புலி முனியும் பதஞ்சலியும் தொழுது ஏத்த**
**வாராரும் கடல் புடை சூழ் வையம் எலாம் ஈடேற**
**ஏராரு மணி மன்றுள் எடுத்ததிரு அடி போற்றி**

இது துதி தினம் பாடி வையம் எல்லாம் ஈடேறவும் நாமும் சகல நலன் பெறவும் சிதம்பரம் அருள்மணி மன்றுள் எடுத்த திரு அடி போற்றி வணங்குவதுடன் தம், தமது ஊர் சிவன் ஆலய கூத்தன் திருவடியை வணங்கி திருவாசகம் ஓதுவோம்.

மணிவாசகர் அட்டகம்

சிவமே குருவாய் அருளும் வடிவம்
புவிமேல் இதுபோல் அறிதற் கரிதாம்
திருவின் உருவாய் எமையாள வந்த
மணிவாசகரின் மலரடி போற்றி

சிவம் குருவாய், வாழையடி வாழையாய் வந்த மாணிக்க வாசகரின் மலரடி போற்றி, அறிவின் மேல் அறிவாகிய திருவின் உருவாய் எம்மை ஆள வந்து சகல துன்பங்களையும் துயரங்களையும், நாட்டின் நம் சந்ததியின் நலங்களையும் பெற்று உயரும் தினம், தினம் 95 வரியுடன் சிவபுராணம், உயிர்களைக் காப்பதற்காக அருட்செயலின் வாசகம் ஓதுவோம்.

இதன் மூலம் சிவ பக்தர் சிவனை அடைவார் எனவும், சிவபுரத்தில் இடம் கிடைக்கும் என்பது தெளிவு. மாதா, மாதம் மகம் நட்சத்திரத்தில் திருவாசகம் ஓதுவோம். காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவிலில் ஒவ்வொரு வெள்ளியும், மாதம் "மகம்" நட்சத்திரத்தில் மாணிக்கவாசகர் ஆலயத்திலும் ஓதுவதும் காணலாம்.

மனிதன் வாழ்க்கையில் விளையும் போட்டியால், பொறாமையும், தன்முனைப்பால் தலைக்கிறுக்கால், பதவிச் செருக்கால், செல்வத்திமிரால் அறிவு மயங்கித் தவறான வழியில் செல்லும் போதும், இன்று போதை வஸ்து அடிமையாகி தவறி விழும் போதும் நம் அறியாமையை நீக்கவும். ஒளி விளக்காகிய- திருவாசகம் போன்ற அருள் நூல்கள் கருணைக் கனியாக நம் கையிற் புகுந்து, தெளிதேனாக உள்ளத்தில் குதித்து அறிவினர் அருந்துணையாகி, வம்பும், துன்பும் போரும், பொய்யும் ஆகிய வஞ்சக வழிகளிலிருந்து விலக்கி, அன்பு நெறியில் அழைத்து இறை திருவடியாகிய பேரின்ப வெளியை அடைகிறது.

திருவாசக முற்றோதல் எல்லோரும் கலந்து ஓதியும், புரட்டாதி மாதம் தென்புலத்தார் ஆசிர்வாதம் (புரட்டாதி மாதம் தென்புலத்தார் நம்முன்னோர் வழிபாடும், நம் குலதெய்வ வழிபாடும் இன்றியமையாத முக்கியமாக திருவள்ளுவர் திருக்குறளில் அறியலாம்.)

குலதெய்வம் அமைத்த நம்முன்னோரது ஆசீர்வாதம், முனிவர்கள், தேவர்களின் அருளுடன் சிவபெருமான் காருண்யமாகும்.

ஆருயிர்கள் ஒழுகி உய்தற் பொருட்டுச் சிவ பெருமான் உயிர்க்கு உயிராய் உணர்வுக்கு உணர்வாய் அகத்தே நின்று இயங்குகின்றான்.

அது போன்றே அருள் உருவாய்க் கோலம் கொண்டு புறத்தே வழிகாட்டியும் இயக்குகின்றான்.

பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்குத் திருவருள் புரிய வேண்டும் என இறைவன் திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

உபய சிதம்பரம்- ஈழத்துச் சிதம்பரம் தூக்கிய திருவடிகளைப் போற்றி வணங்குவோம்.

எல்லாம் சிவன் செயல்
பொல்லாப்பு ஒன்றும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்.

**க.கு.க.சிவபாலன் (k.k.k)**
**சிவநெறிப்புரவலர்**
**பாஞ்சசண்யம்**



(C-4119)

## பாரதம்

# பூனைகள் பெருக்கத்தால் திக்குமுக்காடும் சைப்ரஸ்



(நிக்கோசியா)

சைப்ரஸ் நாட்டில் மக்கள் தொகைக்கு இணையாக பூனைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் அந்நாட்டு அரசு திணறி வருகிறது.

மேற்காசிய நாடான சைப்ரஸ், நீண்டகாலமாக பூனைகளை விரும்பும் சிறிய தீவு நாடாக உள்ளது. இங்கு, 9,500 ஆண்டுகளுக்கு முன், மனிதருடன் புதைக்கப்பட்ட பூனையின் எலும்புகள் அங்கு கண்டறியப்பட்டதே அதற்கு சான்று.

நான்காம் நூற்றாண்டில் புனித ஹெலன் என்ற பாதிரியார், பாம்பு பிரச்சினையை சமாளிக்க பூனைகளை அந்த தீவுக்கு அழைத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

கட்டுப்பாடற்ற இனப்பெருக்கம், ஊர் மக்களின் பராமரிப்பு போன்ற காரணங்களால் தற்போது அங்கு எங்கும் பூனைகள் மயமாகவே காட்சியளிக்கிறது.

சைப்ரஸில் 10 இலட்சம் தெருப் பூனைகள் உள்ளதாக அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். இது சராசரி மதிப்பீடுதான்.

நாட்டின் மக்கள்தொகை, 13.6 இலட்சமாக உள்ள நிலையில், கிட்டத்தட்ட அதற்கு இணையாக பூனைகள் எண்ணிக்கையும் உள்ளன.

நாட்டின் தற்போதைய பூனை கருத்தடை திட்டம் பலனளிக்கவில்லை. இதனால், அவற்றின் எண்ணிக்கை தொடர்ந்து பெருகி வருகிறது.

மேலும் பூனைகளால் தீவின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதோடு, உணவு மற்றும் தங்குமிடம் தேடி தெருக்களில் அலைவதால், அவை துன்புறுத்தல்களையும் சந்திக்கின்றன.

இந்நிலையில், பூனைகள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, அந்த நாட்டு அரசு தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது. (நி)

# போர் நிறுத்த உட
# மீறினால் மீண்டும் தா
# ஹமாஸை எச்சரித்த

**(ஜெருசலேம்)**

**அமெரிக்க ஆதரவுடன் காசாவின் போர்நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளை ஹமாஸ் மதிக்கவில்லையென்றால், மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கப் போவதாக இஸ்ரேல் அச்சுறுத்தியுள்ளது.**

அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளார்.

ஹமாஸ் மேலும் இரண்டு இறந்த பணயக் கைதிகளின் உடல்களை ஒப்படைத்த பின்னர், பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸின் அலுவலகத்திலிருந்து இந்த செய்தி வெளியாகியுள்ளது.

எனினும் சிறப்பு உபகரணங்கள் இல்லாமல் காசாவின் இடிபாடுகளில் இருந்து உடல்களை மீட்டெடுக்க முடியாதுள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ள நிலையிலேயே இஸ்ரேலின் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மத்தியஸ்தத்தில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ், பாலஸ்தீன ஹமாஸ் குழு இஸ்ரேலிய சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட கிட்டத்தட்ட 2,000 பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக 20 உயிருடன் இருந்த பணயக் கைதிகளை இஸ்ரேலிடம் ஒப்படைத்துள்ளது.

# வெடித்து சிதறிய எரிமலை!
## 10 கி.மீற்றருக்கு தூக்கி வீசப்பட்ட சாம்பல்

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவில் உள்ள மௌண்ட் லெவோடோபி லக்கி - லாகி எரிமலை நேற்று முன்தினம் வெடித்துள்ளது.

எரிமலை வெடித்ததில் அதிலிருந்து சாம்பல் வானுயர 10 கி.மீ உயரத் துக்குத் தூக்கி வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உயரிய நிலை எச்சரிக்கையை அதிகாரிகள் விடுத்துள்ளனர். இந்தோனேஷிய நேரப்படி எரிமலை அதிகாலை 1.35 மணிக்கு வெடித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெடிப்பு கிட்டத்தட்ட ஒன்பது நிமிடங்களுக்கு நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தகவலை

# பாகிஸ்தான் - ஆப்கான் இடையே
# அமுலுக்கு வந்தது போர் நிறுத்தம்!

(காபூல்)

தெற்காசிய அண்டை நாடுகளுக்கு இடையே வான்வழித் தாக்குதல்கள் மற்றும் தரைவழி மோதல்கள் பதற்றங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் நேற்று முன்தினம் புதன்கிழமை தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன.

அதன்படி, எல்லைப் பதற்றங்களைத் தணிக்க ஆப்கானிஸ்தான் தரப்பு வேண்டுகோளின் பேரில், பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் 48 மணி நேர தற்காலிக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டதாக இஸ்லாமபாத் வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அரசாங்க செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் அதே நாளில் சமூக ஊடகங்களில், ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர்நிறுத்தம் அமுல் படுத்தப்படும் என்று அறிவித்தார்.

அதேநேரம், பாகிஸ்தான் தரப்பில் எந்த தாக்குதலையும் நடத்தாத வரை, போர் நிறுத்தத் தைக் கடைப்பிடிக்குமாறு ஆப்கானிஸ்தான் அரசாங்கம் அதன் அனைத்துப் படைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே பல நாட்கள் எல்லை தாண்டிய துப்பாக்கிச் சண்டை மற்றும் வான்வழித் தாக்குதலுக்குப் பின்னர் இந்த அறிவிப்புகள் வந்துள்ளன.

2021 ஆம் ஆண்டு காபூலில் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப் பற்றியதிலிருந்து இரு இஸ்லாமிய நாடுகளுக்கும்





# டன்பாட்டை
# தாக்குவோம்!
## ந்த இஸ்ரேல்



அத்துடன் தமது தடுப்பில் இறந்ததாகக் கூறப்படும் 28 பணயக் கைதிகளில் 9 பேரின் உடலங்களை இதுவரை ஒப்படைத்துள்ளது.

இதற்கிடையில், இஸ்ரேல் தனது காவலில் இருந்த மேலும் 45 பாலஸ்தீன உடல்களை தெற்கு காசாவில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு மாற்றியது, இதன் மூலம் திருப்பி அனுப்பப்பட்ட உடல்களில் எண்ணிக்கை 90 ஆக உயர்ந்துள்ளதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் திட்டத்தின் கீழ், இறந்த ஒவ்வொரு இஸ்ரேலிய பணயக்கைதிக்கும் பதிலாக 15 பாலஸ்தீன இறந்தவர்களை இஸ்ரேல் திருப்பியனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

இந்தோனேஷியாவின் புவியியல் மையம் வெளியிட்டது.

எரிமலையிலிருந்து 6 கிலோமீற்றர் முதல் ஏழு கிலோமீற்றர் வரையிலான தூரம் உள்ள பகுதிகளுக்கு யாரும் செல்லக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)



இடையேயான மிக மோசமான மோதல் இதுவாகும்.

பாகிஸ்தானில் தாக் குதல்களை அதிகரித்த போராளிகளைக் கட்டுப்படுத்த ஆப்கானிஸ்தான் தலிபான் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இஸ்லாமாபாத் கோரியதைத் தொடர்ந்து, முன்னாள் நட்பு நாடுகளுக்கு இடையேயான அண்மைய மோதல் வெடித்தது.

போராளிகள் ஆப்கானிஸ்தானில் இருந்து செயற்படுவதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

எனினும், தலிபான் இந்தக் குற்றச்சாட்டை மறுத்து, பாகிஸ்தான் இராணுவம் ஆப்கானிஸ்தான் குறித்து தவறான தகவல்களைப் பரப்புவதாகவும், எல்லைப் பதற்றங்களைத் தூண்டுவதாகவும், நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் இறையாண்மையைக் குறை மதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் கூறியுள்ளது.

எவ்வாறெனினும், இரு நாடுகளுக்கு இடையிலான இந்த மோதலின் விளைவாக பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர்.

100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# எண்ணெய் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் பலி
## இந்தோனேசியாவில் சோகம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் படாம் தீவில் உள்ள தன் ஜங்குன்காங் துறைமுகத்தில் பாமாயில் எண்ணெய் கப்பல் ஒன்று பழுது பார்க்கும் பணிகளுக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கப்பலில் நேற்று முன்தினம் ஏராளமான பணியாளர்கள் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கப்பலின் கியாஸ் டேங்கில் திடீரென தீப்பிடித்தது. அத்துடன் பயங்கர வெடிவிபத்தும் ஏற்பட்டது.

இந்த விபத்தில் 10 பணியாளர்கள் தீயில் கருகி பலியானார்கள். மேலும் 21 பேர் காயமடைந்தனர்.

அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இதில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (நி)

# காசாவில் எட்டுப் பேருக்கு பகிரங்கமாக
# மரண தண்டனையை நிறைவேற்றிய ஹமாஸ்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - காசா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், ஹமாஸ் பயங்கரவாதிகள், பாலஸ்தீனியர்கள் எட்டுப்பேரை பொதுவெளியில் நிறுத்தி சுட்டுக் கொன்றுள்ளமை அப்பகுதியில் மீண்டும் ஹமாஸின் ஆதிக்கம் ஏற்படுவதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையேயான போர், இரண்டு ஆண்டுகளாக நடந்து வந்தது.

அமெரிக்கா முன்மொழிந்த அமைதித்திட்டத்தின் அடிப்படையில் தற்காலிகமாக போர் நிறுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து ஹமாஸ் தன்வசம் இருந்த பிணைக் கைதிகளை விடுவித்தது. இதே போன்று இஸ்ரேலும் தங்கள் நாட்டுச் சிறையில் இருந்த பாலஸ்தீனியர்களை விடுவிக்கத் தொடங்கியது.

இதனால் காசாவில் அமைதி திரும்பும் என்று எதிர்பார்க்கப்பட்டது.ஆனால் ஹமாஸ் அமைப்பினருக்கும், காசாவின் செல்வாக்கு மிக்க ஆயுதமேந்திய குழுவான டக்முஷ் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் மோதல் ஏற்பட்டது.

இரு தரப்புக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில், 32 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலியப் படைகள் வெளியேறத் தொடங்கிய உடன், ஹமாஸ் பயங்கரவாதிகள், காசாவை தங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வர முயற்சிக்கின்றனர். கருப்பு முகமூடி அணிந்த ஹமாஸ் காவலர்கள் வடக்கு காசாவில் தெருக்களில் ரோந்து செல்லத் தொடங்கியுள்ளனர்.

இந்தநிலையில், எட்டு ஆண்களை ஹமாஸ் பயங்கரவாதிகள் சாலை ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லும் காட்சிகள் வெளியாகி உள்ளன.

அவர்கள் கடுமையாக தாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு மண்டியிட்ட நிலையில் சுட்டுக் கொல்வது பதிவாகியுள்ளது. தங்களுக்கு எதிராக இஸ்ரேலுடன் இணைந்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி அவர்களை ஹமாஸ் பயங்கர்வாதிகள் கொன்றனர்.

இஸ்ரேல் ஆதரவு பெற்ற சில ஹமாஸ் எதிர்ப்பு குழுக்கள், மனிதாபிமான உதவிகளைத் திருடி, இலாபத்திற்காக விற்பனை செய்ததாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது காசாவின் பட்டினி நெருக்கடிக்கு காரணமாக அமைந்ததாகவும், அதன் காரணமாகவே அவர்களைக் கொன்றதாகவும் தெரிவித்துள்ளது. (நி)



## பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்க
## மோசமான வரிக் கொள்கைகளே காரணம்
### மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை

(கொழும்பு)

2022ஆம் ஆண்டில் நாடு அழிவுகரமான பொருளாதார நெருக்கடியில் சிக்க இலங்கையின் வரிக்கொள்கைகளே முக்கிய பங்கு வகித்தன.

கல்வி மற்றும் ஏனைய பொதுச் சேவைகளுக்கான நிதி ஒதுக்குகள் தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் நிலவி வருவதற்கும் அவை பங்களிப்புச் செய்ததாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான அதன் கடப் பாடுகளை நிறைவேற்றி வைப்பதற்கு உடனடியாக வழிமுறைகளை பின்பற்ற வேண்டியிருப்பதுடன், தற்பொழுது போதிய அளவிலான வருவாய்களை பெற்றுத்தர முடியாத நிலையில் இருந்து வரும் அதே வேளையில், கம்பனி களுக்கும், செல்வந்தர்களுக்கும் சாதகமாக இருந்து வரும் வரி முறையை மாற்றியமைக்கும் பொருட்டு சீர்திருத்தங்களை எடுத்து வருதல் வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கம்பனித்துறை வரி விலக்குகள் உயரளவிலான செலவு களைக் கொண்டிருப்பதுடன், அவற்றின் வினைத்திறன் கேள்விக்குரியதாக இருந்து வருகின்றது.

மேலும், அவற்றை இலகுவில் தவறான விதத்தில் பயன்படுத்தக்கூடிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே, இந்த வரி விலக்குகளை ஒழிக்கும் விடயத்தை அரசாங்கம் பரிசீல னைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனைய முற்போக்கு இயல்பிலான வழி முறைகளை அது பின்பற்ற வேண்டும். இலங்கையின் நிலை தற்போதைய சர்வதேச வரி முறையின் கீழ் பல அரசாங்கங்கள் எதிர்கொண்டு வரும் சவால்களை பிரதிபலிக்கின்றது.

மனித உரிமைகளை வலுவூட்டும் பொருட்டு சர்வதேச விதிமுறைகளை கட்டியெழுப்புவதற்கான ஐ.நா வரி ஒப்பந்தம் ஒன்று தொடர்பாக தற்பொழுது இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தை களின் முக்கியத்துவத்தையும் அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: சித்திரை
11இல்சூரிசெவ்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L, Photography
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16192

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி-பா-50
உயரம்:5'8"
தகைமை/தொழில்- A/L, தபாலதிபர்
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16193

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
3இல்சூரி செவ்
கி-பா-35
உயரம்:5'8"
தகைமை/தொழில்-O/L,கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16194

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: உத்தரம்
12இல்செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்-BSc, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16196

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:விசாகம்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: BSc, Chemist
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16198

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்-மிருகசீரிடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, pvt
எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரசதொழில்,விவாகரத்தானவர்
தொ.இ: G/14366

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்-சதயம்
7இல்சூரிசெவ்
கி-பா- 95
உயரம்: 5'
தகைமை/தொழில்: MLT
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/15462

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-ரேவதி
கி.பா -06
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BSc,MSc, Engineer(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15463

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
8இல்செவ்
கி.பா -94
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - BSc, Senior Opreation Analyst
எதிர்பார்ப்பு: Only London(PR)
தொ.இ: G/15466

பிறப்பு-1984 - இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
கி.பா-71
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு - Degree & Employee
தொ.இ: G/16189

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 462



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## முதலுணர்வு!

ஒரு பத்துபேரை சந்தித்து, உங்களுக்கு வாழ்க்கையிலேயே எது முக்கியம்?" என்று கேட்டுப் பாருங்கள்.

சிலபேர் சொல்லுவார்கள்.

"எனக்குப் பணம்தான் முக்கியம்!" என்பார்கள் சிலபேர் அன்புதான் முக்கியம்!" என்பார்கள்.

சிலபேருக்கு புகழ்தான் முக்கியமாகத் தெரியும்.

நம்மிடம் ஒரு கருத்து அல்லது உணர்வு இருக்குமாம் அதுதான் நம்முடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் உந்துதலாக அமையுதாம் என மனஇயல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

பணம்தான் பிரதானம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள் பலபேர் உண்டு.

அவர்களுக்கெல்லாம் பணம்தான் எல்லாம்.

நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும். அதைச் செலவு செய்ய வேண்டும். இதுதான் அவர்களுடைய வாழ்க்கையாக அமையும்.

அவர்கள் எல்லாத்தையுமே பணத்தைக் கொண்டுதான் எடை போட்டுவார்கள். மற்றதைப் பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார்கள்.

வேறு சிலபேர் எப்படி என்றால் அவர்களுக்கு அன்புதான் பிரதானம், பணம் பதவியெல்லாம் அதற்கு அப்புறம்தான் இவர்கள் எல்லாம் அன்புக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பார்கள்.

இன்னும் சிலபேர் எப்படி என்றால் அவர்களுக்குப் புகழ்தான் பிரதானம்.

எப்படியாவது புகழ்பெற வேண்டும். அதுதான் அவர்கள் இலட்சியமாக இருக்கும். புகழுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பார்கள்.

இதுமாதிரி ஒரு மனிதனுடைய எல்லா நடவடிக்கைகளையும் பாதிக்கின்ற ஆற்றல்மிக்க ஓர் உணர்வு அவர்களிடம் இருக்கும்.

அதற்குப் பெயர்தான் முதலுணர்வு.

ஒரு மனிதனை ஆராய வேண்டும் என்றால் அவனுடைய முதலுணர்வு என்ன என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

தன்னையறிதல் என்று சொல்கிறார்களே.

அதாவது நம்மையே நாம் ஆராய்ந்து பார்க்கிறது. அதுவும் ரொம்ப முக்கியம்.

நம்மையே நாம் ஆராய்ந்து பார்த்தால் நம்முடைய முதலுணர்வு என்ன என்பதை நம்மால் கண்டுபிடித்துவிட முடியும்.

நம்முடைய முதலுணர்வைப் பொறுத்துதான் நம்முடைய விருப்பு வெறுப்புகள் அமையும்.

அதனாலே நாம் எப்படிப்பட்ட ஆள் என்பதை நாமே புரிந்து கொள்வது நல்லது.

இப்போது நீங்கள் ஒவ்வொருத்தருமே தனியாக உட்கார்ந்து யோசித்துப் பாருங்கள்.

நீங்கள் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஆளா? அன்புக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஆளா?

புகழுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஆளா? உங்கள் முதலுணர்வு என்ன என்பதைப் புரிந்து கொள்வது பலவிதத்திலே உதவியாக இருக்கும்.

அதுமட்டுமல்ல... தினமும் நாம் எத்தனையோ பேரிடம் பழக வேண்டியிருக்கும்.

அவர்களுடைய "முதலுணர்வு" என்ன என்பதைக் கண்டுபிடித்து விட்டால் அவர்களோடு பழகுவது நமக்குச் சுலபமாகிவிடும்.

சில ஆசாமிகளை இப்படி ரகம் பிரிக்கிறது ரொம்பக் கடினம்.

ஒருவர் இலஞ்சம் வாங்கிவிட்டார்.

அவருக்குப் பணம்தான் முக்கியம் என்று முடிவு செய்து விட்டேன்.

ஆனால் அவர் அதை ஒத்துக்கவில்லை.

"எனக்கு அன்புதான் சார் முக்கியம். அன்புக்காக எதையும் செய்வேன்!" என்றார்.

"அப்படி என்றால் எதற்காக பணம் வாங்கினீர்கள் அந்த ஆளிடம்?" என்று கேட்டேன்.

இதற்கு அவர் சொல்கிறார்.

"அந்த ஆள் வெறுமனே வந்து "இந்தாருங்கள்" பணம் என்று கொடுத்திருந்தால் வாங்கியிருக்க மாட்டேன் சார். அதை ரொம்பவும் பணிவாக அன்பாக என்னிடம் கொடுத்தார்.

அந்த அன்புக்குக் கட்டுப்பட்டு வாங்கிவிட்டேன்!" என்றார்!



## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் திறந்து வைப்பு

(அராலி)

தெல்லிப்பழை சந்தியின் வட மேற்கு மூலையாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் நேற்று முன்தினம் புதன் கிழமை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனால் திறந்து வைக்கப்பட்டது.

இம் மணிக்கூட்டுக் கோபுரம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவன் தணிகாசலம் விஜயகுமாரின் நிதிப்பங்களிப்புடன் அவரது தந்தை கந்தையா தணிகாசலம் ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8- 104)

## நூலகசேவையும் விழிப்புணர்வு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, யாழ்ப்பாண பொது நூலகத்தின் "நூலக சேவையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்" இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் ஊரெழு கணேச வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெற உள்ளது. (8)

# கொடையுள்ளம்

மனிதனுடைய நற்செயற்பாடுகளில் கொடையும் ஒன்றாகும் "கொடை" என்ற சொல் கொடுத்தலைக் குறிக்கும். "கொடைவள்ளல்" என்ற தொடர் இன்றும் வழக்கில் உள்ளது. வளமை நிறைந்தவர் தாம் நாடி வரும் இரவலர் கேட்பதைக் கொடுப்பர். அத்தகைய கொடையுள்ளம் கொண்டவர்களே கொடை வள்ளல்கள் என அழைக்கப்பட்டனர். தொன்மையான தமிழிலக்கியங்களில் இத்தகைய கொடைவள்ளல்கள் பற்றிய பதிவுகளுள்ளன. இக்கொடையை விட ஈதல் என்ற சிறந்த குணவியல்பும் உண்டு.

ஈதல் என்பது ஒருவருடைய தேவையை உணர்ந்து அதற்குரியதை வழங்குதல். பயன் கருதாமல் கொடுப்பதே ஈகையாகும். அதிலும் சிறப்பாக வறியவர்க்கு ஒன்றை ஈவதே ஈகையாகும். ஈகையினால் நாம் அடையும் இன்பமே உண்மையான இன்பமாகும்.

கொடையும் ஈகையும் "ஒன்றைக் கொடுத்தல்" என்ற நிலையின் அடிப்படையில் ஏற்றுமையான குணநலன்களே. ஆனால் கொடுக்கும் பொருள் நிலை வேறுபாட்டால் அவை உணரப்படுகின்றன.

கொடையை விட ஈகை மேலானது. கொடை நாடி வருபவருக்குக் கொடுப்பது. ஈகை என்பது கொடையை எதிர்பார்த்திருப்பவரைத் தேடிச் சென்று கொடுப்பது. பண்டைய இலக்கியங்களிலே தம்மைப் புகழ்ந்து பாடிய புவலர்களுக்குப் பொருட் கொடை செய்த அரசர்களைப் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

ஈகையால் ஒருவர் அடைகின்ற இன்பமே மிகச்சிறந்த இன்பமாகும். அந்த இன்பம் நினைக்கும் போதெல்லாம் மகிழ்வைத் தரும். பசி என்னும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டவரை மீட்பதற்கே கொடையாளர் தேவை. பலருக்கு உணவைப் பகிர்ந்து கொடுப்பவருக்குப் பசி என்னும் பிணி தீண்டாது.

பசித்திருப்பவரைப் பார்த்திருப்பது பாவம். பலர் பிறருக்கு எதையும் கொடுக்காமல் செல்வத்தைப் பேணிவைப்பதால் பயன் இல்லை. ஒருவன் தன்னுடைய பொருளைப் பேணி வைக்க வேண்டுமானால் பசித்தவர்களுக்கு உணவுக் கொடை செய்ய வேண்டும். இதனை அன்னதானம் என்றும் கூறுவர். இது சோற்றுக் கொடை எனத் தமிழில் அழைக்கப்பட்டது.

வையத்திற்கு நீரை வழங்கும் மழையையும் இயற்கையின் கொடையென்பர்" காலம் அறிந்து மழைபெய்கிறது. அது பெய்யும்போது நல்லார் ஒருவருக்காகப் பெய்கிறது. எல்லோரும் அந்த மழையால் பயன் பெறுகிறார்கள். இத்தகைய கொடையுள்ளம் படைத்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் செயற்பாடுகள் எப்போதும் பிறருடைய நலனையே எண்ணிச் செயற்படுவதாகவே அமையும்.

வையகமெங்கும் இன்று பசி என்னும் பிணி பரவி வருகிறது. அப்பிணியை எவ்வாறு தீர்ப்பது எனப் பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. எனினும் இன்னமும் ஒருமுடிவும் வெளிவரவில்லை. ஆனால் அதற்கு ஒரு வழியை வள்ளுவர் குறளிலே பதிவு செய்து வைத்துள்ளார். பசியை ஆற்றுகின்ற வல்லமையுடையவரை நாம் முதலிலே கண்டுபிடிக்க வேண்டும்.அவர்களின் துணையால் பசிப்பிணி வாய்ப்பட்டிருப்போரைக் காப்பாற்ற முடியும்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" ஆவர். மனிதன் உயிர்வாழ உணவு இன்றியமையாதது. எனவே உணவுத் தேட்டத்தில் எல்லோரும் ஈடுபட வேண்டும். மணிமேகலை என்னும் தமிழ்ப்பேரிலக்கியம் பசிப்பிணி பற்றிய குறிப்பைத் தருகிறது. புறநானூற்றுப் பாடல் ஒன்று சோற்றுக் கொடை செய்த பண்ணன் என்பவனுடைய கொடையை விளக்கியுள்ளது. அப் பண்ணனுடைய இல்லம் "பசிப்பிணி மருத்துவன் இல்லம்" என அழைக்கப்பட்டது. இத்தகைய குறிப்புகள் முன்னைய காலத்தில் மக்களின் பசிப்பிணி எவ்வாறு நீக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்கின்றன.

எனவே மனிதர் கொடையுள்ளம் கொண்டவராகச் செயற்படப் பலமுயற்சிகள் செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். உணவுத்தேட்டம், உணவுப்பகிர்வு, உணவு வீணாக்கல் போன்றவற்றை நெறிப்படுத்த வேண்டும். பசித்தவருக்கு உணவுதேடிக்கொடுக்க எல்லோரும் இணைந்து செயற்பட வழிகாட்ட வேண்டும்.

கொடையுள்ளம், இரப்போர் என ஒரு மக்கட்குழு உருவாகாமல் தடுப்பதற்கு வழி செய்யும். பசிப்பிணியைத் தடுக்கும். ஈதல் மனிதரை இசைவாக்கம் செய்யும். இயற்கையைப் போல மனிதனும் தன்னலமின்றிச் செயற்படும் கொடையுள்ளம் கொண்டால் எவ்லோரையும் மகிழ்வாக வாழ வைக்கலாம்.

**வெள்ளி நற்சிந்தனை 09**



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

17.10.2025
புரட்டாதி 31 , வெள்ளிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 2.12 மணிவரை
மகம் பிற்பகல் 5.25 மணிவரை

சுப நேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்:
உத்தராடம்,திருவோணம்

வளவன்




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், நண்பர்களால் நன்மையுண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், திடீர் பயணங்கள் கைகூடும், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை கூடும்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், பொது வாழ்வில் புகழ்கூடும்.




குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், விட்டுச் சென்ற உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.




வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்ட முற்படுவர்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேவையற்ற மனக்குழப்பங்களைத் தவிர்ப்பது நல்லது.




வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விடா முயற்சி தோல்வியை வெற்றியாக மாற்றுகிறது.**

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 887





மூன்றாவதாக எனக்குத் தெரியும்! இப்போது உனக்கும் தெரியும்! பாதையைத் திறப்பது எப்படி என்று தெரிந்து கொண்டாய் அல்லவா?"

இருவரும் அப்பாதையில் இறங்கிச் சென்றார்கள். தீவர்த்தியின் வெளிச்சம் சிறிது நேரத்திற்கெல்லாம் மறைந்தது. ஊமை ராணி தான் மறைந்து நின்ற இடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாக அங்கு வந்தாள். திறந்திருந்த வழியை உற்றுப் பார்த்தாள். அதில் இறங்குவதற்கு ஓர் அடி வைத்தாள். பிறகு புனராலோசனை செய்தவளாய்ச் சட்டென்று காலை வெளியில் எடுத்தாள்.

சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்து விட்டு, முன்னம் ரவிதாஸன் சுவரின் மீது ஏறிய இடத்தை நோக்கினாள். அங்கே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று அவன் ஏறியது போலவே தானும் சுவர் மீது ஏறினாள். பலகணியை அடைந்ததும் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு அப்பால் பார்த்தாள். சுவரை ஒட்டினாற் போல் தோட்டமும் அதற்கப்பால் அழகிய மாடமாளிகையும் தென்பட்டன. அந்த மாளிகையைப் பார்த்ததும் அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. அதற்குள்ளே தனக்கு உயிரினும் இனியவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவள் உள்ளுணர்ச்சி கூறியது. இரகசிய வழியாகப் போகிறவர்கள் தனக்குப் பிரியமானவர்களுக்குத் தீங்கு செய்யும் நோக்கம் கொண்டவர்கள் என்பதையும் உணர்ந்தாள். அவர்களுடைய தீய நோக்கத்தைத் தடுக்கும் ஆற்றலைத் தனக்குக் கொடுத்து அருள வேண்டுமென்று அவள் அந்தராத்மாவில் குடிகொண்டிருந்த தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

கீழே இறங்கிவிடலாமா என்று அவள் எண்ணிய சமயத்தில் சற்றுத் தூரத்தில் தெரிந்த மாளிகையின் மேன் மாடத்தில் ஓர் அதிசயக் காட்சி தெரிந்தது. சற்று முன் அந்த இருளடர்ந்த நிலவறையிலிருந்த ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் அதில் ஏறித் தூண்களின் மறைவில் ஒளிந்து நின்றார்கள். அரண்மனையின் உட்பக்கமாக உற்று உற்றுப் பார்த்தார்கள். அப்போது பகல் நேரமாதலால் அந்த மாளிகையின் மேன்மாடம் நன்றாகத் தெரிந்தது. ரவிதாஸன் கையில் தீவர்த்தி இல்லை. சாம்பவன் கையில் வேல் மட்டும் இருந்தது. ரவிதாஸன் அந்த வேலை வாங்கிக் கொண்டு மாளிகையின் உட்புறத்தை நோக்கி அதை எறிவதற்காகக் குறி பார்த்தான். ஊமை ராணியின் நெஞ்சு அச்சமயம் நின்றுவிட்டது போலிருந்தது. நல்ல வேளையாக ரவிதாஸன் வேலை எறியவில்லை. எறிவது போல் பாவனை செய்து விட்டுச் சோமன் சாம்பவனிடம் திரும்பக் கொடுத்து விட்டான். மறு கணம் அவர்கள் இருவரும் அங்கிருந்து மறைந்து விட்டார்கள்.

ஊமை ராணியும் பலகணியிலிருந்து சுவர் வழியாகக் கீழே இறங்கினாள். சுரங்கப்பாதை தென்பட்ட இடத்தையே பார்த்துக் கொண்டு மறைந்து நின்றாள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பாதையில் மறுபடி தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. இருவரும் வெளியில் வந்தார்கள் சுரங்கப்பாதையை மூடினார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குறும்பு



(நேற்றைய தொடர்ச்சி)

நன்றாக படிக்கிற பையனைப் பார்த்து, அவனைப் போல நாமும் நன்றாகப் படித்து அதிக மார்க் வாங்க வேண்டும் என்று நினைக்கிறது தானே நியாயம். நீ ஏன் அவன் மேலே பொறாமைப் படுகிறாய்?

அவன் பென்சிலை உன்னுடையது என்று ஏன் பொய் சொல்லுகிறாய்? பாலனின் முகம் வாடியது. அது எப்படி டீச்சர் உங்களுக்குத் தெரியும்? என்று முகத்தில் அசடு வழியக் கேட்டான் பாலன். உன் முகம் காட்டிக் கொடுத்து விட்டது. அது மட்டுமில்லை, நேற்று நான் எழுது பொருள் வாங்குவதற்காகப் போயிருந்த கடையில் பாபுவின் அப்பா புதிதாகப் பென்சில் வாங்கியதைப் பார்த்தேன் என்றார் டீச்சர். பாலனின் மனம் அமைதி பெற வில்லை.

எல்லாம் சரி, பாபுவுக்கு ஏன் சைபர் மார்க் போட்டீங்க. அதை மட்டும் சொல்லிவிடுங்கள் என்றான். மறுபடியும் டீச்சர் முகத்தில் புன் முறுவல்." சொல்கி றேன். எல்லோ ரும் நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

இந்தச் சின்ன வயதில் உங்களிடம் பொறாமைக் குணம் இருக்கவே கூடாது. போட்டி மனப்பான்மை இருக்கலாம். அதில் தவறு இல்லை. எல்லோருமே நன்றாகப் படித்து நிறைய மார்க் வாங்க வேண்டும் என்று நினைக்க வேண்டும். அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது. கணக்கை எல்லோரும் சிலேட்டில் போட்டுக் கொண்டு இருந்த போது பாபுவுக்கு பக்கத்திலே உட்கார்ந்திருந்த பையன் சேகர் சிலேட்டில் எழுதும் குச்சியை எடுத்து வரவில்லை போலிருக்கு. உடனே பாபு தன்னுடைய குச்சியில் பாதியை ஒடிச்சு சேகரிடம் கொடுத்து உதவியதை நான் பார்த்தேன். அதனால் தான், பாபுவுக்கு சைபர் மார்க் போட்டு அவனுக்கு கோபம் வருகிறதா என்று பார்த்தேன். ஆனால் பாருங்க பாபுவுக்கு கோபம் வரவில்லை இப்பொழுது கைகளைக் கட்டிக் கொண்டு பாபு எழுந்து நின்றான். "டீச்சர்... எங்க அம்மா தினமும் என்னிடம் சொல்லுவார்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று டீச்சரை தெய்வமா நினைக்கணும். அவர்கள் சொல்றதைக் கவனிக்க வேண்டும். என்று தினமும் சொல்லுவார்கள். அதனால எனக்கு உங்கள் மேலே கோபமே வருவதில்லைஎல்லா மாணவர்களும் பாபுவை வியப்போடு பார்த்தனர்.

முன் வரிசையில் நின்றிருந்த பாலன் ஓடிச்சென்று பாபுவின் கைகளைப் பற்றிக் கொண்டு, பாபு... பாபு... உன்னைப் போல எனக்கு ஒரு நண்பன் கிடைத்தால் போதும். நான் நல்லா படிப்பேன். என்னை மன்னித்துவிடு பாபு. இனிமேல் யார் மேலேயும் பொறாமைப் பட மாட்டேன். இது சத்தியம்" என்றான். பாலனை தழுவிக் கொண்டான் பாபு.

(முற்றும்.)

> துணிவு இல்லையேல் வாய்மை இல்லை, வாய்மை இல்லையேல் பிற அறங்களும் இல்லை.
>
> *– மகாத்மா காந்தி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தனியாரின் காணிகளை கையகப்படுத்தாதீர்கள்

கோப்பாய் பொலிஸ் நிலையம் இயங்கி வந்த தனியாரின் காணிகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த 30 ஆண்டுகளாகத் தனியாரின் காணிகளில் கோப்பாய் பொலிஸ் நிலையம் இயங்கிவந்த நிலையில், காணி உரிமையாளர்கள் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்தும் கோப்பாய் பொலிஸ் நிலையம் அதுபற்றி இம்மியும் கருத்திலெடுக்கவில்லை.

இந்நிலையில், குறித்த காணி உரிமையாளர்கள் 2019ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

கடந்த ஆறு வருடங்களாக வழக்கு நடந்த நிலையில், நேற்று முன்தினம் (15) நீதிமன்றின் கட்டளையின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலையம் இயங்கி வந்த காணி மற்றும் வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

தங்களின் சொந்த வீடு வளவை மீட்டெடுப்பதற்காகக் காணி உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அதனை நடத்த வேண்டிய நிலைமை இருந்துள்ளது.

தவிர, குறித்த வழக்கு பொலிஸாரின் ஆக்கிரமிப்புக்கு எதிரானது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

ஆம், சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் எப்படி நடந்துள்ளனர் என்பது தெரிகிறதல்லவா.

ஆம், காணி உரிமையாளர்கள் தங்களின் காணிகளை ஒப்படைக்குமாறு கேட்கும்போது, ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான ஓர் இடத்தைத் தெரிவு செய்து அங்கு பொலிஸ் நிலையம் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு; உரியவர்களிடம் காணிகளை ஒப்படைத்திருக்க வேண்டும்.

ஆனால் அது எதுவும் நடைபெறவில்லை எனும்போது, கோப்பாய் பொலிஸ் நிலையம் பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளதென்பது உறுதியாகின்றது.

ஆம், பொலிஸ் நிலையமொன்று தனியாருக்குச் சொந்தமான காணிகளையும் வீடுகளையும் கையகப்படுத்தி அத்துமீறலாக அதில் இயங்கிவந்துள்ள நிலையில், உரியவர்கள் நீதிமன்றை நாடியதன் அடிப்படையில் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

இதன் பிரகாரம் நீதிமன்றப் பதிவாளரின் தலைமையில் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் உரிய இடத்துக்குச் சென்று, உரிய காணிகளைப் பொறுப்பெடுத்து அவற்றை உரிமையாளர்களிடம் கையளித்தனர் என்பது, இலங்கைப் பொலிஸ் சேவையின் தாழ் நிலையை சுட்டிக்காட்டுவதாகும்.

எனவே எங்கேனும் தனியாரின் காணிகளை அபகரித்து அதில் பொலிஸ் நிலையங்கள் இயங்குமாயின், அவற்றை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கின்ற பணியை பொலிஸ் திணைக்களம் உடனடியாகச் செய்து தனது கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### சங்குப்பிட்டியில் பெண் படுகொலை

## மருந்தக உரிமையாளர் உதவியாளருடன் கைது

பூநகரி, சங்குப்பிட்டி 18 ஆவது மைல்கல் அருகில் கடந்த 12 ஆம் திகதி காரைநகரைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்ட பூநகரி பொலிஸார் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 51 வயதுடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருந்தகம் ஒன்றின் உரிமையாளரையும் 32 வயதுடைய மருந்தக உதவியாளரையும்கைது செய்துள்ளனர்.

குறித்த குடும்பப் பெண் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு முகம் உள்ளிட்ட பகுதிகளில் எரியக்கூடிய திரவம் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டு கடலுக்குள் வீசப்பட்டு நுரையீரலில் நீர் புகுந்ததால் எற்பட்ட மூச்சுத்திணறலால் உயிரிழந்தமை உடற்கூற்று பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டிருந்தது

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையில் குறித்த பெண்ணின் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டமை தெரியவந்தது.

பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் பிரகாரம் சந்தேக நபர்கள் இருவரும் கொள்ளையிட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான 10 பவுண் மதிப்பிலான தங்க நகைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண் ஏலவே மருந்தகம் ஒன்றில் பணிபுரிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச நிறுவனங்களில் பழுப்பு நிறச்சீனி

உள்ளூர் சீனி உற்பத்தியை ஆதரிப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக அனைத்து அரச நிறுவனங்களும் தங்கள் உணவு கொள்முதலில் பழுப்பு நிறச் சீனியை மட்டுமே கொள்முதல் செய்வதை கட்டாயமாக்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த முடிவு முப்படைகள், இலங்கைப் பொலிஸார், சிறைச்சாலைகள் துறை மற்றும் அரச வைத்தியசாலைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு பொருந்தும்.

உள்ளூர் பழுப்பு சீனி தொழிலை வலுப்படுத்துதல், தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் நுகர்வோர் மத்தியில் உயர்தர உள்ளூர் பழுப்புச் சீனியை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்த நடவடிக்கையை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

## யாழ்ப்பாணத்தில் நாளை தீபாவளி இலக்கியக் கூடல்

(யாழ்ப்பாணம்)

தீபாவளி இலக்கியக் கூடல் வைபவமானது நாளை 18 சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி முன்னிலையில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி அவர்கள் ஆற்றிய "நாங்கள் தேர்ந்தெடுத்த பாதைகளும் தேர்ந்தெடுக்காத பாதைகளும்" எனும் தலைப்பிலான 2025 அரச இலக்கியப் பேருரையின் தமிழ் வடிவம் அடங்கிய நூல் வெளியீடு இதன்போது இடம்பெறவுள்ளது.

மேலும் மூத்த எழுத்தாளர்களான கோபாலப்பிள்ளை கேதாரலிங்கம் மற்றும் அற்புதராணி காசிலிங்கம் ஆகியோருக்கான விசேட கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக நூல் கண்காட்சி மற்றும் நூல் விற்பனையும் சிறப்பம்சங்களாக நடைபெறவுள்ளன.

அதே வேளை தெரிவு செய்யப்பட்ட ஐந்து நூலகங்களுக்கு அமைச்சரால் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தீபாவளிப் பரிசு எனும் போர்வையில் வரும் ஆப்பு

### பொலிஸார் அவசர எச்சரிக்கை

(கொழும்பு)

விசேட பண்டிகைக் காலங்களில் பிரபல்யமான நிறுவனங்களின் பெயரால் இணையத்தளத்தில் உலாவரும் பரிசுகள், பகிர்வுகள் போன்றவற்றைச் சட்ட விரோதமானவை என்றும் அவற்றை நம்பி உள்நுழைய வேண்டாம் எனவும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டாம் எனவும் இணையக் குற்றவியல் பொலிஸார் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்சமயம் தீபாவளிப் பண்டிகை நெருங்கிவரும் சூழலில் இவ்வாறான பரிசுப் பகிர்வுகள், வாழ்த்துப் பகிர்வுகள் ஊடான மோசடிகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான பகிர்வுகளூடாகப் பயனர்களது கைத்தொலைபேசி ஹக்கிங் செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் அதனூடாகத் தனிப்பட்ட தரவுகள், வங்கி விபரங்கள் சமூகவலைத்தளக்கணக்குகளும் களவாடப்பட வாய்ப்புள்ளது.

அத்துடன் தீபாவளிப் பரிசுப் பொதியொன்றை வெற்றி பெற்றுள்ளீர்கள், விலையுயர்ந்த தொலைபேசியைப் வெற்றி பெற்றுள்ளீர்கள் அவற்றை உங்களுக்கு அனுப்புவதற்காகக் குறிப்பிட்டளவு பணத்தை வைப்பிலிடுங்கள் போன்ற அநாமதேயத் தொலைபேசி அழைப்புகளை நம்பிப் பணமோசடி வலைக்குள் சிக்காது அவதானத்துடன் செயற் படுமாறும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

### திருச்சீரலைவாயில்

## ஆறு.திருமுருகனின் ஆன்மீக சொற்பொழிவு

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்சீரலைவாய் எனப் போற்றப்படும் திருச்செந்தூரில் நடைபெறவுள்ள கந்த சஷ்டி திருவிழாவில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 10 வருடகாலமாக திருச்செந்தூரில் நடைபெறும் கந்தசஷ்டி திருவிழாக் காலங்களில் சொற்பொழிவு ஆற்றிவரும் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இம்முறையும் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றவுள்ளமை சிறப்பம்சமாகும். (ம-7)

### நடுக்கடலில் காலியான எரிபொருள்

## தமிழக மீனவர்கள் மூவர் அனலைதீவில் தஞ்சம்

தமிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் எரிபொருள் இன்றி காற்றின் வேகம் காரணமாக இலங்கை அனலைதீவுக் கடற்கரையில் தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அவர்களது படகிலிருந்து எரிபொருள் முடிந்ததன் காரணமாகப் படகு காற்றின் வேகத்தில் சிக்கி யாழ்ப்பாணம் - அனலைதீவு கடற்பரப்பில் கரை ஒதுங்கியது.

இதனைக்கண்ட அப்பகுதி மீனவர்கள் இலங்கைக் கடற்படை யாழ்ப்பாணம் மீன்வளத்துறை மற்றும் அனலைதீவு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

எரிபொருள் இன்றி மீனவர்கள் மூவரும் அனலைதீவுக் கடற்பரப்பில் தஞ்சமடைந்தது அனலைதீவுப் பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்து மூவரும் நீதிமன்றத்தின் ஊடாக சிறை தண்டனையின்றி படகுடன் விடுதலை செய்யப்பட வாய்ப்பிருப்பதாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

## பகுதி VI

25

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இத்திட்டம் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற முடியவில்லை. குடியேற்ற நாட்டு அலுவலகத்தார், அரசமைப்புத் திட்டத்தை இத்துணை சீக்கிரம் மாற்ற எவ்வித நியாயமுமில்லையெனக் கூறி விட்டனர்.

முதலாவது அரசுக் கழகம், குறிப்பிட்ட ஐந்து ஆண்டுகளுக்குச் சேவை செய்து **1936** இல் கலைந்தது. அவ்வாண்டு நடந்த இரண்டாவது பொதுத்தேர்தலில் ஒன்றியொதுக்கல் நடைபெறவில்லை.

**எம்.எம். வெத்தர்பேர்ன் ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயம் -1933 :-** டொனமூர் அரசியலமைப்பின்படி *1930* ஆம் ஆண்டு ஜனவரி மாதம் *24*ஆம் திகதி றொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு *50* ஆசனங்களை ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்தது என்பதையும் அவ்வெல்லை நிர்ணயத்தின்படியே *1931* ஆம் ஆண்டுத் தேர்தல்கள் நடந்ததென்பதையும் முன்னர் கூறப்பட்டது.

*1931*ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் பொது மக்களிடையே றொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் எல்லை நிர்ணயத்தில் சில குறைபாடுகள் இருப்பதான கருத்திருந்ததால், *1936*ஆம் ஆண்டுத்தேர்தலுக்கு முன்னர் இவ் *50* தேர்தல்தொகுதிகளினதும் எல்லைகளில் ஏதாவது மாற்றம் செய்யப்படவேண்டுமா என்பதைப் பரிசீலிப்பதற்கு *1933*ஆம் ஆண்டு எம். எம். வெத்தர்பேர்ன் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

அது எல்லைகளைப் பரிசீலித்து எல்லைகளில் செய்யப்படவேண்டிய மாற்றங்களைத் தனது அறிக்கையின் மூலம் ஜூலை *1935*இல் சமர்ப்பித்தது.

இக் குழுவின் எல்லை நிர்ணயத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தேர்தல் தொகுதிகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இருந்தும் மட்டக்களப்பு மக்களின் வேண்டுதலுக்கு ஏற்ப கிழக்கு மாகாணத்திலிருந்த திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து திருகோணமலையைப் பிரித்து மட்டக்களப்புக்கு இரு தேர்தல் தொகுதிகளைக் கொடுப்பதோடு திருகோணமலையை அனுராதபுர தேர்தல் தொகுதியுடன் அல்லது மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதியுடன் இணைக்க எண்ணியிருந்ததும் அவ்வெண்ணம் பின்னர் கைவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தல்- 1936**

இதே எல்லை நிர்ணயத்தின் படி இரண்டாவது இலங்கை அரச சபைத் தேர்தல் *1936* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றது. இவ் அரச சபையின் காலம் *11* வருடம் *3* மாதமாகும். *5* வருட முடிவில் நடைபெற வேண்டிய மூன்றாவது தேர்தல், *1941* இல் *2* ஆம் உலகப் போர் சூழல் காரணமாக நடைபெறவில்லை.

இரண்டாவது இலங்கை அரசசபைத் தேர்தலில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் பின்வருமாறு காணப்பட்டது:- தாழ்பிரதேசச் சிங்களவர் *-31*, கண்டிச் சிங்களவர் *-8*, இலங்கைத் தமிழர்கள் *-8*, இந்தியத் தமிழர்கள்*-2*, ஐரோப்பியர் *- 1* .

ஆளுநர், *4*- ஐரோப்பியர். *1*- பறங்கியர், *1*- இந்தியர், *1*- மலே இனத்தவர், *1*- முஸ்லீம் என்ற ரீதியில் மற்றைய எட்டு இடங்களுக்கும் நியமனம் செய்தார். தேர்தலில் எந்தவொரு முஸ்லீம் உறுப்பினரும் தெரிவு செய்யப்படாத காரணத்தால் இவ் அரச சபைக்கு முஸ்லீம் உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஆனால் *1942* ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தலில் முஸ்லீமொருவர் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தேர்தல்களில் பின்வருவோர் வெற்றி பெற்ற தமிழர்கள் ஆவர்

வட மாகாணம்:-

- ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரனி வைத்திலிங்கம் துரைசுவாமி போட்டியின்றித் தெரிவு செய் யப்பட்டார்.

- காங்கேசன்துறை தேர்தல் தொகுதி:- கௌரவ செனட்டர் சுப்பையா நடேசன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

- யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி:- சட்டத்தரணி சேர் அருணாசலம் மகாதேவா மீண்டும் தெரிவுசெய்யப்பட் டார்.

- பருத்தித்துறை தேர்தல் தொகுதி:- சட்டத்தரனி ஜி.ஜி.பொன்னம்பலம் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

- மன்னார்-முல்லைத்தீவு தேர்தல் தொகுதி- ஆர். சிறீ பத்மநாதன் *(1936-1943)*. இவர் *1943*இல் காலமானார். அதனையடுத்து சிறிது காலம் ஞானமுத்து ஐசாக் உறுப்பினரானார். *1944*இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜெகநாதன் தியாகராசா அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கிழக்கு மாகாணம்:-

- திருகோணமலை-மட்டக்களப்பு தேர்தல் தொகுதி :- சட்டத்தரணி இம்மானுவேல் ராசநாயகம் தம்பிமுத்து தெரிவு செய்யப்பட்டார். இவர் *1943*ஆம் ஆண்டு ஜூனில் இலங்கை அரச சபையிலிருந்து வெளி யேற்றப்பட *1943* ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடந்த இடைத் தேர்தலில் ஆசிரியராகவி ருந்த வல்லிபுரம் நல்லையா போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

- மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதி :- சின்னக்குட்டி உடையார் கனகரத்தினம் *(1936-1938)* தெரிவு செய்யப்பட்டார். இவர் *1938* இல் காலமானார். *1938* இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் சபாபதிப்பிள்ளை தர்மரத்தினம் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**மத்திய மாகாணம்-:**

- ஹற்றன் தேர்தல் தொகுதி:- ஊடகவியலாளர் கோதண்டராமன் நடேசஐயர் தெரிவுசெய்யப்பட்டார்.

- தலவாக்கலை தேர்தல் தொகுதி:- சிதம்பரப்பிள்ளை வைத்திலிங்கம்.

**மேல் மாகாணம்:-**

- கொழும்பு வடக்கு தேர்தல் தொகுதி:- நேசம் சரவணமுத்து மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

**ஊவா மாகாணம்:-**

- *1943* ஆம் ஆண்டு நடைபெற்ற பண்டாரவளைத் தேர்தல் தொகுதிக்கான இடைத் தேர்தலில் ஜே. ஜீ. இராசகுலேந்திரம் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்திய தமிழ் வர்த்தகர் சார்பில் D.B.I. சேவியர் மீண்டும் அரச சபைக்கு உறுப்பினராக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

*1936* ஆம் ஆண்டு மார்ச் மாதம் *17*ஆம் திகதி சட்டத்தரணி வைத்திலிங்கம் துரைசுவாமி அரச சபையின் சபாநாயகராகத் தெரிவு செய் யப்பட்டு *1947*ஆம் ஆண்டு வரையும் அப் பதவியிலிருந்தார்.

*1936* ஆம் ஆண்டு குடியேற்ற நாட்டுச் செயலாளராக நியமிக்கப்பட்ட திரு ஓம்ஸ்பி கோர் (Ormsby Gore) பழைய பிரச்சினைகளைப் புதுவித நோக்கத்துடன் ஆராய முற்பட்டார். அவரின் ஆலோசனையின் படி, சேர் அன்ட்றூ கல்டிக்கொட் *1937* இல் இலங்கையின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

கல்டிக்கொட் அவர்கள், தம் வாழ் நாள் முழுவதையும் மலாயாவில் செலவிட்டு, அங்கு அவர் ஒரு சிறந்த மதிநுட்பம் வாய்ந்த நிருவாகி எனப் பெயர் பெற்றவர். ஆசிய மக்களுடன் நீண்ட காலம் சேவை செய்த அனுபவத்துடன் இங்கு வந்தமையினால் அவர், இலங்கையர் மட்டில் அன்பும் அனுதாபமும் கொண்டிருந்தார்.

(தொடரும்...)

## முள்ளியவளை...

நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் முதலாம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த கந்தசாமி விசுவலிங்கம் (வயது-74) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் கடந்த 14ஆம் திகதி முற்பகல் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (15) மாலை உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## அநுராதபுரத்தில்...

பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் அநுராதபுரத்திற்கு அண்மையில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஏழாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த அகிலன் திவ்யா (வயது - 31) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் திருமணம் செய்து ஒரு வருடமான நிலையில் இவ் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் மேலும் ஒரு யுவதிப் பெண்ணும் உயிரிழந்துள்ளார். (ம-7)

## கிளிநொச்சியில்...

இதில் அதே இடத்தைச் சேர்ந்த நாகநாதன் கிருசா (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி யுவதி கடந்த 14ஆம் திகதி இரவு வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை (16) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## யாழில் தகரம்...

யாள் ஒருவர் தகரம் வெட்டியதில் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைச் சேர்ந்த கரிகரராசா தனஸ்குமார் (வயது-36) என்பவரே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞன் கடந்த 14 ஆம் திகதி தகர அட்டியை நகர்த்த முயன்றபோது தகரம் வெட்டியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை (16) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## சாவகச்சேரியில்...

இருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். நேற்று வியாழக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரி கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த சு.சுபாசினி (வயது-53) என்பவரே உயிரிழந்தவராவார்.

கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி வந்த புகையிரதம் சாவகச்சேரி-சங்கத்தானையை அடைந்ததும் மேற்படி பெண் புகையிரதத்தில் இருந்து இறங்க முற்பட்டுள்ளார். இருப்பினும் அவர் இருந்த பெட்டியின் வாயில் ஊடாக இறங்குவதற்கு இறங்கு தளம் இல்லாத காரணத்தால் வேறு பெட்டி ஊடாகச் சென்று இறங்க முற்பட்ட வேளையில் புகையிரதம் நகர்ந்ததால் பெண் கீழே விழுந்து படுகாயமடைந்திருந்தார்.

படுகாயமடைந்த பெண்ணை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்திருந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பல்கலைக்கழகம் ஒன்றில் கற்கும் மகளிடம் சென்று மீண்டும் வீடு திரும்பியபோதே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,30)

## அல்லைப்பிட்டி...

வந்தவர்களை ஏற்றிவந்த சொகுசு பேருந்து மோதியதில் மீன் வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கண்ணதாஸ் பிரேமதன் (வயது-61) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவு நோக்கிப் பயணித்த சொகுசு பேருந்து, யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில், அல்லைப்பிட்டி சந்திக்கு அருகில் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மீன் வியாபாரியை மோதியதில் வியாபாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வியாபாரியின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேருந்தின் சாரதியைக் கைது செய்துள்ள ஊர்காவற்றுறைப் பொலிசார் விபத்துத் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60,104)

## பாசை...

இறைச்சியுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும்பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக்கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,104)

## தீயில் எரிந்த...

பனைக் கடையின் உட்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதால் தளபாடங்கள் மற்றும் சரக்குகள் என்பன தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த விற்பனை நிலைய உரிமையாளர் நேற்றுமுன்தினம் கடையினைப் பூட்டிவிட்டுச் சென்று மீண்டும் நேற்றுக் காலை வியாபார நடவடிக்கைகளுக்காக கடையினைத் திறந்த போது கடையின் உட்பகுதி முழுவதும் எரிந்து உள்ளதை அவதானித்துள்ளார்.

அதன் பின் குறித்த சம்பவம் தொடர்பாக மருதங்கேணிப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


மஹஜன சம்பத
திகதி 2025.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 5984
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 1 4 3 1 2 7

அத சம்பத
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 3 1 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 0559
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக் Suba Dawasak
திகதி 2025.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 100
வெற்றி இலக்கினங்கள் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 10 30 41
323818
29299
137844
1934
www.nlb.lk

தன நிதானய
திகதி - 2025.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 2014
F 02 52 75 81 F
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து
Double Chance இலக்கம்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மெகா பவர்
திகதி 16/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2332
வெற்றி எழுத்து V சுப்பர் இலக்க 02 வெற்றி இலக்கங்கள் 14 32 56 69
தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk

NLB ஜய JAYA
திகதி 2025.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 0252
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 1 5 4 0
தேசிய லொத்தர் சபை இல.32,N.M.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 0112-470662, 0114-607000 இணையம்: www.nlb.lk

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4226
சீட்டிழுப்பு திகதி 16.10.2025
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 18 22 66 71
விசேட வெற்றி எழுத்து P
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 1293
வெற்றி இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 10 16 27 55 கடகம்
தன யோக இலக்கம் | தேசிய லொத்தர் சபை | நாளுக்கான விதி எண்

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.10.2025 வெற்றி வாரம் 0692 வர்ணம்
ஆங்கில எழுத்து S மற்றும் வெற்றி இலக்கம் 9 2 3 2 5 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,539,456.40
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 2958 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 2025.10.16 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 05 29 59 ஆங்கில எழுத்து I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,738,908.80
அபிவிருத்தி லொத்தர் சபை DLB

சனிதா Shanida
திகதி 16.10.2025 வெற்றி வாரம் 5119 வர்ணம்
வெற்றி இலக்கங்கள் 02 03 26 78 ஆங்கில எழுத்து X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,428,315.20
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 0792
சீட்டிழுப்பு திகதி 16.10.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 14 38
இன்று இரண்டு இலட்சத்திற்கு அதிபதியானோரின் எண்ணிக்கை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4670 வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 16.10.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 34 54 60 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,312,973.20
அபிவிருத்தி லொத்தர் சபை DLB

ஜய

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 01 12 36 62 66
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2134
வர்ணம்
திகதி 16.10.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.600,624,398.20
அபிவிருத்தி லொத்தர் சபை DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2784
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி : 2025.10.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,759,356.00
வெற்றி இலக்கங்கள் 22 32 45 50 ஆங்கில எழுத்து C
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள்
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## விடுபடும்...

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் இடைக்கால நிறை வேற்றுப் பணிப்பாளர் ஃபெடரிக்கோ பொரெல்லோ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் மனித உரி மைகள் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதையும், அவற்றை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு மனித உரிமைகள் கண் காணிப்பகம் பணியாற்றிவருவதாகவும்,

அதேபோன்று அண்மையில் முடிவுக்கு வந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை மேலும் இரண்டு வருடங்களுக்குக் காலநீடிப்பு செய்யும் வகையில் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையை யும், அதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசா ங்கம் வாக்கெடுப்பைக் கோராமையை யும் வரவேற்பதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையில் கடந்த கால மீறல்களால் பாதிக்கப்பட்ட தரப்பி னரைச் சந்தித்ததாகக் குறிப்பிட்ட ஃபெடரிக்கோ பொரெல்லோ, வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளடங்க லாக மீறல்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதுடன் அதனைத் தெரிந்துகொள்வதற்கான உரிமை அவர்களது உறவினர்களுக்கு உண்டு எனவும், தற்போதுவரை தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு மற்றும் குற்றவாளிகள் கொண் டாடப்படும் கலாசாரம் என்பன முடிவுக் குக் கொண்டுவரப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் உக்ரேன் மீது ரஷ்யாவும், பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேலும் கட்ட விழ்த்துவிட்டுள்ள மீறல்கள் குறித்தும், ஆப்கானிஸ்தான் மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளின் நிலைவரம் குறித்தும் நினைவுகூர்ந்த அவர், மீறல் கள் மற்றும் ஒடுக்குமுறைகள் மூலம் உலகநாடுகள் தமது அதிகாரத் தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளும் போக் கினை அவதா னிக்க முடிவதாக வும், அமெரிக்கா அதற்கு ஆதர வாக செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இந்தப் போக்கு "புதிய ஒழுங்காக" மாறியிருப்பினும், அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்த பொரெல்லோ, "இலங் கையில் 2022 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடியை அடுத்து உருவான அரகலய போராட் டத்தின் ஊடாக மேற்குறிப்பிட்டவாறான போக்குகளைத் தம்மால் ஏற்கமுடியாது என மக்கள் தெளிவாக வெளிப்படுத் தினர். இலங்கையில் மாத்திரமன்றி பங்களாதேஷ், நேபாளம், மடகஸ்கார் போன்ற பல நாடுகளில் இவ்வாறான போராட்டங்கள் எழுச்சியடைந்ததைப் பார்த்தோம். எனவே இவ்வாறான கட்டமைப்பை நேர்த்தியான புதிய தொரு கட்டமைப்பின் ஊடாகப் பதிலீடு செய்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு உண்டு என்றார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

பிரதான வீதி, சங்கானையில் அமைந்துள்ள
Global Dental care இற்கு A/L படித்த பெண்
வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயதெல்லை 18 - 23 விரும்பத்தக்கது.
077 300 2189, 076 932 0612
(1650)


## 3 இலட்சம்...

அதிகாரிகள் தெரிவித்தனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் ஆலோ சனைக் குழுவில் பங்கேற்ற போதே அதிகாரிகள் இதனைக் குறிப்பிட்டனர்.

அதேபோல், பாதுகாப்பு அம்சங்கள் மேம்படுத்தப்பட்ட புதிய சாரதி அனு மதிப்பத்திரங்கள் இந்த ஆண்டு அச் சிடப்பட்டு வழங்கப்படும் என அமைச்சு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சி டுவதற்கு தேவையான ஒரு மில்லியன் கார்டுகளை பெற்றுக்கொள்ள அனை த்து ஏற்பாடுகளும் முடிவடைந்துள் ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

காத்திருப்பு பட்டியலில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை விரைவாக வழங்குவதற்காக, ஒவ்வொரு மாகாண த்திலும் அச்சு இயந்திரம் ஒன்றை நிறுவுமாறு குழுத் தலைவர், அதிகாரி களுக்கு அறிவுறுத்தினார். (ம-7)

## கடற்படை...

ஏனைய கட்சி உறுப்பினர்களும், போதைப்பொருள் ஒழிப்புக்கும் காணி சுவீகரிப்புக்கும் சம்பந்தம் இல்லை. ரேடார் அமைப்பதற்கு இரண்டு ஏக்கர் தேவையில்லை. மக்கள் காணி மக்களுக்கே என கூறிவிட்டு மக்கள் காணிகளை சுவீகரிக்க அனுமதிக்க முடியாது என்றனர்.

அத்துடன் வலிகாமம் வடக்கு பிர தேச சபை மற்றும் மக்களின் எதிர்ப்பை காட்டும் வகையில் பிரதேச செயலாள ருக்குக் கடிதம் அனுப்பவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. (ம-7)


## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com
(C-4122)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
நிபந்தனைகளுடன்

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-4122)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## யாழ்ப்பாணத்தில் Voyzant

10 பேர் கொண்ட குழுவில் ஒரு நபரிற்கு - 185,000/=
தென்னிந்திய ஆலய தரிசனம் 09 இரவுகள்/10 நாட்கள்
தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற 35 இற்கு மேற்பட்ட ஆலயங்கள் (மேலும் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கான சுற்றுலாப் பயணங்களும் மேற்கொள்ளப்படும்.)



மேலதிக விபரங்களுக்கு:
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
Voyzant(PVT)Ltd
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
(C-4109)


## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை



தோற்றம் 04.03.1934 | மறைவு 16.10.2025

சித்தங்குறிச்சி பூநகரியைப் பிறப்பிடமாகவும் நெற்புலவு, பூநகரி மற்றும் தற்போது தரவன் கோட்டை, மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (சரசு) அவர்கள் நேற்று (16.10.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னு தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் முருகேசு காசிப்பிள்ளை(கமக்காரர் & நாட்டுப் புறக் கலைஞர்) அவர்களின் அன்பு மனைவியும் தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, கந்தையா ஆகியோரின் அன்பு சகோதரியும் குலசேகரம் (ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்), புஷ்பநாதன் (ஓய்வு நிலை தபால் அத்தியேச்சகர்), சகுந்தலா தேவி, ரவீந்திரராஜா (சுவிஸ்), துரைசிங்கம் (UK), கோமளாதேவி (மன்னார்), சித்ராதேவி(UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் ஆனந்தி (ஓய்வு நிலை சிராப்பர்-JMC), பவானி, யோகராஜா (ஓய்வு நிலை ஊழியர்-SLT), ஜமுனா(BA -சுவிஸ்), வளர்மதி (ஆசிரியை), சந்திரகுமார் (உரிமையாளர் வள்ளி இண்டஸ்ட்ரிஸ்-மன்னார்), கிருஷ்ணாகரன் (கணக்காளர்-UK) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வாசுகி (ஓய்வு நிலை ஆசிரியை), லோகனா (கனடா), தசிலன் (பிரான்ஸ்), மதுரகன் (நில அளவையாளர்), டிசாந்த் Eng. (அவுஸ்திரேலியா), கஜிந்தா, குலமகள் (சதுரங்க பயிற்று விப்பாளர்), அருணோதையன் QS (டுபாய்), பிரதாப், திவாகரி, சோபிகா(தாதி மாணவி), கஸ்தூரி(களனி பல்கலைக் கழகம்), அபிநயன் (சுவிஸ்), தீபிகா (சுவிஸ்), சஹானன்(UK), மோகனன் (UK), கேதாரன் (புனித சேவியர் ஆண்கள் பாடசாலை மாணவன்), வர்மிதா (UK), ஜெயகுமார் (ருமேனியா), ஸ்ரீதரன் (பிரத்தியேக செயலாளர் - கௌரவ கடற்தொழில் அமைச்சர் ), கௌதமி, கஜன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் பிரதோஸ், ஸ்ரீவினி, சினாமிகா, கவின், தர்ஸ்வின், கிருத்திக், அனாமிகா, ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் பொது இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல் :* குடும்பத்தினர்
கு.மதுரகன்(பேரன்) Kirudthik Land Surveying
077 717 7383
(1651)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் இளையதம்பி இரட்ணம்

(யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் -. யாழ்., பல்கலைக்கழகம்)

எம் குடும்பத்தின் குலநாயகனே!
பதினாறும் பெற்று
பெருவாழ்வு வாழ்ந்தீரே! - இன்று
எமை விட்டுச் சென்ற உம்மை
இனி எங்கே நாம் தேடுவது
தவிக்கிறது எம் மனம்
உங்களை நினைத்து...

பிரிவால் துயருறும்...
மைத்துனர்மார், மைத்துனிமார்
(5678)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.